Registered as a Newspaper

பக்கங்கள் – 16+8

விலை – ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 133

ஞாயிற்றுக்கிழமை
07 ஏப்ரல் 2024

பங்குனி 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



“அப்ப கண்ணிவெடியள் இல்லாட்டி இனி கண்ணைமூடிக்கொண்டு காலை வைக்கலாம் கண்டியளோ”

இந்த வருடத்துடன்

# கண்ணிவெடிகளுக்கு வடக்கில் முற்றுப்புள்ளி!

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்ரல் 7

**வடக்கில் இந்த வருடத்துடன் கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்படும் என்று வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ல்ஸ் தெரிவித்துள்ளார்.**

02

## தமிழரின் வழிபாட்டுரிமை பாதுகாக்கப்படவேண்டும்

### இலங்கை சைவமகாசபை வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 7

தமிழர் வழிபாட்டு உரிமை பாதுகாக்கப்பட்டாலே வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான புரிந்துணர்வு என்பது சாத்தியப்படும் என்று கொழும்பு பௌத்த இளைஞர் சங்கத் தலைவர் தலைமையிலான குழுவிடம் அகில இலங்கை சைவமகாசபை வலியுறுத்தியுள்ளது.

02

## யாழ்ப்பாணத்தில் மடுமாதா!



யாழ்ப்பாணம், ஏப். 7

சுமார் 50 வருடங்களின் பின்னர், மன்னார் மடுமாதா அன்னையின் திருச்சொரூபம் யாழ்ப்பாணத்துக்கு நேற்று மாலை கொண்டுவரப்பட்டுள்ளது. பல்லாயிரம் பக்தர்கள் உணர்வுபூர்வமாக இந்த வழிபாடுகளில் கலந்து வருகின்றனர்.

02

## இலங்கைக்கு தடை நீக்கம்

கொழும்பு, ஏப். 7

இலங்கை தற்போது அடைந்துள்ள பொருளாதார முன்

02

நோயாளி உயிரிழப்பு

## அக்குபஞ்சர் நிலைய அனுமதிப்பத்திரம் ரத்து

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் இயங்கி வரும் அக்குபஞ்சர் நிலையத்தில் சிகிச்சை பெற்ற நோயாளர் ஒருவர் உயிரிழந்ததையடுத்து, அந்த அக்குபஞ்சர் நிலையத்தின் அனுமதிப்பத்திரத்தை மார்ச் 28 முதல் இரத்துச் செய்வதாக வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

மேற்படி அக்குபஞ்சர் நிலையத்தில் உயிரிழந்த நோயாளிக்கு முழங்காலில் ஊசிகளைச் செலுத்தியதாகவும், அந்த ஊசிகள் உரிய முறையில் தொற்றுநீக்கப்

02

## ரயில் விபத்தில் ஒருவர் படுகாயம்

வவுனியா, ஏப். 7

வவுனியா - ஓமந்தை, பன்றிக்கெய்தகுளம் பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் நேற்று இடம் பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்

02

இலங்கையில் இருந்து

## தமிழகத்துக்கு கடத்தப்பட்ட 5 கிலோ தங்கம் சிக்கியது!

சென்னை, ஏப்.7

இலங்கையில் இருந்து கடல்வழியாக தமிழகத்துக்குக் கடத்திச் செல்லப்பட்ட 5 கிலோ தங்கம் இந்தியக் கடலோரக் காவல் படையால் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

02

## முன்பள்ளிக் கல்வி இனிக் கட்டாயம்!

கொழும்பு, ஏப். 7

நான்கு வயதைப் பூர்த்திசெய்த ஒவ்வொரு பிள்ளையும் அடுத்த வருடம் முதல் முன்பள்ளிக் கல்வியைப் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பு டட்லி சேனாநாயக்க வித்தியாலயத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில்

02

## கண் பார்வை பறிபோக கெஹலியவே காரணம்

### 100 மில்லியன் இழப்பீடு கோருகிறார் ஒருவர்

கொழும்பு, ஏப். 7

தரமற்ற மருந்துப்பாவனை காரணமாக தனது கண்பார்வையை முற்றாக இழந்துவிட்டதாக மக்காரி ராஜரத்தினம் என்பவர் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் 100 மில்லியன் ரூபா

02



## கஞ்சா கடத்தல்காரர்களின் சொத்தை முடக்கத் திட்டம்!

### யாழ்ப்பாணப் பொலிஸார் அதிரடி

யாழ்ப்பாணம், ஏப். 7

கஞ்சா கடத்தலுடன் தொடர்புடைய வலைப்பின்னல் ஒன்று பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இந்த வலைப்பின்னலுடன் தொடர்புடையவர்களின் சொத்துகளை முடக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் 'யுக்திய' சுற்றிவளைப்பு நடவடிக்கைத் திட்டத்தில், யாழ்ப்பாணம் மாவட்ட

02

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்ணிவெடிகளுக்கு...

கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை தொடர்பான விழிப்புணர்வுக்கான சர்வ தேச தினத்தையொட்டி கிளிநொச்சி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டிருந்த போதே வடமாகாண ஆளுநர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:-

கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போது, 2030 ஆம் ஆண்டுக்குப் பின்னரே இலங்கையை கண்ணிவெடியற்ற நாடாகப் பிரகடனப்படுத்த முடியும் என்ற ஒரு நிலைப்பாடு எழுந்தது. ஆனால் துரித முயற்சிகளின் விளைவாக இந்த வருடத்தில் வடமாகாணத்திலிருந்து கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மக்கள் தங்களுடைய குடியிருப்புகளுக்குள் செல்லக்கூடிய நிலை ஏற்படும்.

இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபடும் சர்வதேச அமைப்புகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பூநகரி மற்றும் முகமாலைப் பகுதிகளில்தான் தற்போது கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

மீள்குடியேற்றச் செயற்பாடுகளை நிறைவு செய்ய கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களின் ஒத்துழைப்பு மிக அவசியம் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும்.

இதேவேளை - நிலக்கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளில் பெண்களை ஈடுபடுத்திய நாடு என்ற பெருமையை இலங்கை கொண்டுள்ளது. இந்தப் பணியில் தம்மை அர்ப்பணித்த பெண்கள் விசேடமாகப் பாராட்டப்படவேண்டியவர்களே - என்றார்.

அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(அ-ம-26-27)

## அக்குபஞ்சர்...

பட்டிருக்கவில்லை என்பதையும் சம்பந்தப்பட்ட மருத்துவர் உறுதிப்படுத்தினார். இவர் தங்களின் வியாபார அனுமதிப்பத்திரத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு நோயாளிகளுக்கு இதுபோன்ற சிகிச்சைகளை மேற்கொள்வது ஆபத்தான விடயங்களை ஏற்படுத்தும். இவற்றைக் கருத்திற்கொண்டு உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் அந்த அக்குபஞ்சர் நிலையத்தின் உரிமத்தை இரத்துச் செய்கின்றேன் என்று தனது அறிக்கையில் வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான பிரதியை வடமாகாண ஆளுநருக்கும் அவர் அனுப்பிவைத்துள்ளார்.

(அ-ம)

## கண்...

இழப்பீடு கோரியுள்ளார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி நுவரெலியா மருத்துவமனையில் கண் சத்திரசிகிச்சை மேற்கொண்டதாகவும் மறுநாள் வீடு சென்றதாகவும் மருத்துவமனையில் தனக்கு வழங்கப்பட்ட சொட்டு மருந்தை பாவித்ததும் கண்ணில் எரிச்சல், தலைவலி என்பன ஏற்பட்டதாகவும் இதனையடுத்து மே மாதம் 10 ஆம் திகதி மேலதிக சிகிச்சைக்காக தேசிய கண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகவும் குறிப்பிட்ட அவர், அங்கு தனது கண்பார்வை குறைந்து வருவதாக மருத்துவர்கள் கூறியதாக அவர் தெரிவித்துள்ளார்.

மக்காரி ராஜரத்தினத்தின் சார்பில் கோரிக்கைக் கடிதம் அனுப்பியுள்ள சட்ட நிறுவனம் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை மருத்துவர் ஜனக சந்திரகுப்தா, மருத்துவர்கள் விஜித் குணசேகர, மருத்துவர் அசேல குணவர்த்தன, மருத்துவர் ரொஹான் எதிரிசிங்க, மருத்துவர் மகேந்திர செனிவிரத்ன ஆகியோரையும் சமீ கெமிஸ்ட் நிறுவனத்தையும் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளது. (அ-ஒ-6)

## முன்பள்ளிக்...

வைத்தே கல்வி அமைச்சர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இடவசதி உள்ள மற்றும் மூடப்பட்டிருக்கும் அனைத்துப் பாடசாலைகளிலும் முன்பள்ளிச் சிறுவர்களுக்கு வகுப்பறைகள் ஒதுக்கப்படும் எனவும் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)

## கஞ்சா...



பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜயசிங்கவின் உத்தரவுக்கு அமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப் பொருளுக்கு எதிரான சிறப்புச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி, யாழ்ப்பாணம் மாவட்ட சிறப்புக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கடந்த வாரம் சாவகச்சேரிப் பகுதியில் சிலர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களை நீதிமன்ற அனுமதியுடன் பொலிஸாரின் கண்காணிப்பில் எடுக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். அந்த விசாரணையில் கஞ்சா கடத்தலுடன் தொடர்புடைய வலைப்பின்னல் ஒன்று அவதானிக்கப்பட்டது. அவர்கள் வழங்கிய தகவல்களுக்கு அமைய யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் வானொலிப் பெட்டிக்குள் கஞ்சா கடத்திய இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 2 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது.

விசாரணையின் போது மன்னார் பேசாலையில் இருந்தே அவர்களுக்குக் கஞ்சா கிடைப்பது தெரிய வந்ததையடுத்து, சந்தேகத்துக்குரிய வீடு நேற்று முன்தினம் இரவே சுற்றிவளைக்கப்பட்டது.

வீட்டுக்குள் ஒன்றரை அடி ஆழத்தில் மண்ணில் புதைத்து உயிர்கொல்லி கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது. சுமார் 16 கிலோகிராம் கஞ்சா இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. கஞ்சா கடத்தலுக்கு உதவிய குற்றச்சாட்டுக்காக வீட்டின் உரிமையாளர் கைது செய்யப்பட்டார். அனைவரிடமும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

'யுக்திய' சுற்றிவளைப்பின் கீழ் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதால், சந்தேகநபர்களின் வங்கிக் கணக்குகளை முடக்குவது, சொத்துக்களை முடக்குவது உள்ளிட்ட நடவடிக்கையிலும் பொலிஸார் தீவிரம் காட்டியுள்ளனர். (அ-ம-26)

## தமிழகத்துக்கு...

இலங்கையில் இருந்து படகுமூலம் தங்கம் கடத்தப்படுகின்றது என்று இந்திய மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இரகசியத் தகவலை அடுத்து மண்டபம் கடலோரக்காவல் படையுடன் இணைந்து இந்திய மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் நேற்றுமுன்தினம் மன்னார் வளைகுடாவில் தீவிர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சந்தேகத்துக்கு இடமாகப் பயணித்த படகொன்றை வழிமறிக்க முயன்றபோது, படகில் இருந்தவர்கள் பொதியொன்றைக் கடலில் வீசிவிட்டுத் தப்பிச் செல்ல முயன்றனர். அந்தப் படகு வழிமறிக்கப்பட்டு, அதிலிருந்த 3 பேர் கைது செய்யப்பட்டனர். கடலில் நடத்தப்பட்ட தேடுதலில் தங்கக்கட்டிகளுடன் பொதியொன்று மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட தங்கத்தின் பெறுமதி சுமார் 3 கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள்

முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தமிழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(அ-எ-56)

## ரயில்...

துள்ளார். அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயில், பன்றிக்கெய்தகுளம் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது கடவையைத் தாண்டிச் செல்ல முற்பட்ட 'கப்' வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. 'கப்' வாகனத்தின் சாரதி படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ரயிலின் முன்பகுதியும் பலத்த சேதமடைந்தது.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர், குறித்த பாதுகாப்பற்ற ரயில் கடவையில் ஏற்பட்ட விபத்தில் நால்வர் உயிரிழந்திருந்தனர். இதையடுத்து, அந்தக் கடவையை பாதுகாப்பான ரயில் கடவையாக மாற்றும்படி பல தரப்பினரும் பல்வேறு வலியுறுத்தல்களை மேற்கொண்டனர். எனினும் அது பாதுகாப்பற்ற ரயில் கடவையாகவே தற்போது வரை உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

## இலங்கைக்கு...

னேற்றம் காரணமாக, இலங்கைக்குத் தடையின்றிப் பயணிக்கமுடியும் என்று தனது மக்களுக்குப் பிரிட்டன் அறிவுறுத்தியுள்ளது.

2022ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் மற்றும் அரசாங்கத்துக்கு எதிரான நெருக்குவாரங்களைத் தொடர்ந்து பொருளாதாரரீதியாகவும் இதர விடயங்களிலும் பாதுகாப்பற்ற நாடாக சர்வதேச சமூகத்தால் இலங்கை அடையாளப்படுத்தப்பட்டது.

இதனால், இலங்கைக்குப் பயணிப்பது தொடர்பில் பல்வேறு நாடுகளும் இலங்கைக்கு இறுக்கமான பயணக் கட்டுப்பாடுகளை விதித்திருந்தன. பிரிட்டனும் இலங்கைக்குப் பயணிப்பது 'ஆபத்தானது' என்று தன் மக்களுக்கு அறிவுறுத்தியிருந்தது. இந்த நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார முன்னேற்றங்களைத் தொடர்ந்து இலங்கைக்குப் பயணம் செய்வதில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடுகளைப் பிரிட்டன் நீக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, உணவு, எரிபொருள் மற்றும் மருந்துத் தட்டுப்பாடு குறித்து முந்தைய ஆலோசனையில் இருந்த தகவல்கள் இந்த புதுப்பிக்கப்பட்ட பயண ஆலோசனையில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. இது தவிர, மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை போன்ற சுகாதார சேவைகளில் எச்சரிக்கப்பட்டிருந்த சவால்களும் நீக்கப்பட்டுள்ளன. (அ-ம)

## தமிழரின்...

கொழும்பு பௌத்த இளைஞர் சங்கத் தலைவர் மகேந்திர ஜெயசேகரா தலைமையிலான குழுவினருக்கும் யாழ்.சர்வமதக் குழுவினர் மற்றும் சிவில் சமூகத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை யாழ்.வணிகர் கழகப் பணிமனையில் வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் அகில இலங்கை சைவமகாசபையின் பொதுச் செயலாளர் மருத்துவக் கலாநிதி ப.நந்தகுமார் உள்ளிட்ட சைவமகாசபையின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர், குருந்தூர்மலை ஆதிசிவன் கோவில்களில் தமிழர்களுக்கு வழிபாட்டு உரிமை மறுக்கப்படுகின்றமை, மட்டக்களப்பு, மயிலத்தமடு விவகாரம், வடக்கு மற்றும் கிழக்கில் முன்னெடுக்கப்படும் பௌத்தமயமாக்கல் ஆகிய பிரச்சினைகள் தொடர்பாகவும், தமிழ் மக்களுக்கு வழங்கப்படவேண்டிய அதிகாரப் பகிர்வு, சம உரிமைகள் தொடர்பாகவும் கருத்துரைத்தனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் சாதகமாகப் பரிசீலித்து அரசுக்கு அழுத்தம் கொடுப்பதாகவும், கருத்துருவாக்கம் செய்வதாகவும் கலந்துரையாடலில் பங்கேற்ற கொழும்பு பௌத்த இளைஞர் சங்கத்தினர் தெரிவித்தனர். (அ-ம-66)

## யாழ்ப்பாணத்தில்...

மருதமடு அன்னையின் முடிசூட்டு விழாவின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மடுமாதாவின் திருச்சொரூபம் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு நேற்று எடுத்துவரப்பட்டுள்ளது. எதிர்வரும் 9ஆம் திகதி வரை யாழ். மறைக்கோட்டத்தில் உள்ள ஆலயங்களில் மடுமாதா பவனி வரவுள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்திலும், புனித மடுத்தீனார் குருமடத்திலும், பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்திலும், கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்திலும், மணியந்தோட்டம் கார்த்தர் ஆலயத்திலும் மாதாவின் திருச்சொரூபம் எழுந்தேற்றம் செய்யப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்றன.

இதன் தொடர்ச்சியாக இன்று புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடத்தில் காலை 7.45 மணி தொடக்கம் காலை 8.15 மணி வரைக்கும், பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 8.45 மணி தொடக்கம் மாலை 4 மணி வரைக்கும், குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் மாலை 5 மணி தொடக்கம் நாளை காலை 7 மணி வரைக்கும் மடு அன்னையின் திருச்சொரூபம் எழுந்தேற்றம் செய்யப்படவுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டு. கண்ணகிக்கு இன்று தேர்!

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகி அம்மனுக்கு இன்று தேர்த் திருவிழா கும்ப பூஜையு டன் ஆரம்பமாகி பிற்பகல் 2 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத்தொடர்ந்து பிற்பகல் 3.30 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள் காட்சி கொடுப்பாள். மறுநாள் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு ஆலய பித்தர் கேணியில் தீர்த்தோற் சவமும் இடம்பெறும்.

(ம)

# கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம், ஏப். 7

சித்திரைப் புத்தாண்டை முன் னிட்டு நல்லூர் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவும், பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவும் இணைந்து நடத்தும் பிரதேச சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் நல்லூர் பிரதேச செயலக வளாகத் தில் நாளை திங்கட் கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளது.

(எ-66)

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் வீட்டில் தங்கியிருந்து சமையல் மற்றும் வீட்டு பராமரிப்பு வேலை செய்வதற்கு 40 வயதுக்குட்பட்ட பணிப்பெண் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு: 077 298 7506

## வேலையாட்கள் தேவை

கொக்குவிலில் இயங்கும் சிறிய விடுதி ஒன்றிற்கு அறை பராமரிப்பாளர் (ஆண், பெண்) இரவு நேர காவலாளி, தோட்ட வேலை செய்யக்கூடியவர் (பகுதி நேரம்) தேவை

தொடர்புகளுக்கு: 077 236 7848

## மணமகள் தேவை

யாழ். இந்து (V) 1966 Australia Citizen Technician (விவாகரத்து) மணமகனுக்கு மணமகள் தேவை.

077 964 9245

## தோட்டக்காணி விற்பனைக்கு

அச்சுவேலி - வசாவிளான் பிரதான பாதையில் தொழிற்பேட்டைக்கு செல்லும் வீதியில் சுமார் **38 பரப்பு செம்மண் காணி** வற்றாத கிணற்றுடன் **விற்பனைக்கு உண்டு.**

077 921 5550

(CS/27234-A) J-1

## உடனடி வேலைவாய்ப்பு

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கம்பனிக்கு அலுவலக உத்தியோகத்தர்கள் ஆண்/பெண் (Office) வேலைக்கு தேவை

T.P: 076 112 4145

## மோட்டார் சைக்கில் விற்பனைக்கு

சிவப்பு பிளசர் மோட்டார் சைக்கில் விற்பனைக்கு NPXG-, சிறுவர்கள் விளையாடும் பூங்காவில் விளையாட்டு உபகரணங்கள் விற்பனைக்கு

T.P: 076 112 4145

## வீடு வாடகைக்கு

யாழ் நகருக்கு அண்மையில் **சண்டிலிப்பாயில் நிறுவனங்களுக்கும், குடியிருப்புகளுக்கும்** ஏற்ற, வாகனங்கள் நிறுத்தக்கூடிய வசதியுடன் **வீடு வாடகைக்கு உண்டு.**

075 560 9890

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த 1989ம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரகபாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள **அரச திணைக்களத்தில்** பணிபுரியும் (HNDIT) **மணமகனுக்கு** பொருத்தமான பணிபுரியும் **மணமகளை** பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(CS/00126) J-1

077 864 9878, 077 634 3103

## விற்பனைக்கு

**ஒறிச்சினல் டாஸ் ஒண் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு.**

077 758 7079

## காணி விற்பனைக்கு உண்டு

உரும்பராய் பலாலி வீதி கற்பகப் பிள்ளையார் வடக்கு வீதியில் உள்ள ஒழுங்கையில், 3 ம் ஒழுங்கையில் 3 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு இலக்கம் 0094754942055 whatsapps மூலமாக தொடர்பு கொள்ளவும். இலங்கை நேரம் 10.00 Am To 6.00 Pm தரகர் தேவையில்லை.

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் Cargills Building இல் இயங்கும் பிரபல நிறுவனத்தின் காட்சியறைக்கு காசாளர் தேவை (ஆண்/பெண்)

CS (54648) V-1

021 728 4559, 074 022 6704

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ 41 வயது சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை (சீதனம் எதிர்பார்ப்பில்லை)

தொடர்புகளுக்கு:

077 905 8615 (வைபர் & வாட்ஸ்அப்)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

**3 மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில.** By ந. விக்னேஸ்வரன் ஆச்சார்யார். (25 வருட அனுபவம்) குபேரன் கட்டட மாடி. பிரான்பற்று வீதி. சங்கானை.

077 675 1649

## நாள் வாடகைக்கு அறைகள்

கொழும்பு - வெள்ளவத்தையில் காலி வீதியில் கொமர்ஷியல் வங்கிக்கு எதிரில் Tiles பதித்த இணைந்த குளியலறையுடன் அறைகள் நாள் வாடகைக்கு உண்டு.

076 965 9679, 071 262 5405

## 11ம் ஆண்டு நினைந்துருகல் அஞ்சலி

மனிதநேயம் மண்ணில் மரணிப்பதில்லை



திதி: 07.4.2024

### Lion மார்க்கண்டு கிரிதரன்

அகில இலங்கை சமாதான நீதவான்
விமாகி உரிமையாளர்

அன்பு உருவே மறைந்தாலும் அழியாது நினைவலைகள்
ஆண்டுகள் பதினொன்று பறந்தே ஓடோடினும்
அழியா நினைவலைகள் எம் இதயத்தில்
அணையற்ற வெள்ளமாக பெருக்கெடுக்கின்றது
ஆனாலும் அது நெஞ்சத்தை அனலாய் சுடுகிறதே
காலம் மனப்புண்ணை ஆற்றும் என்பது
காலம் கடந்ததொரு பொய்யாய்த் தெரிகிறது.
இனிய நினைவுகளும், இழந்தவலியும் வேதனையும்
இறுதி மூச்சுவரை எம்முள் சுமப்போம்.

நீங்கா நினைவலைகளுடன்
அன்பு மனைவி: றோகினி கிரிதரன்
ஆசை மகள் : கிரிதரன் அம்ரிஷா

Tel:
0777 701523

# STUDY IN INDIA

## SSM COLLEGE OF ARTS & SCIENCE

இலங்கை UGC யினால் அங்கீகரிப்பட்ட University Campus
( Approved by Govt. of Tamilnadu and Affiliated to Periyar University, Salem)
(Approved by UGC of India & Sri Lanka (IAU-013436)
KOMARAPALAYAM, TAMILNADU, INDIA.

## CARIEER GUIDANCE PROGRAMME ON HIGHER EDUCATION

For OL / AL Passed Students

O/L மற்றும் A/L சித்தியடைந்த மாணவர்களிற்கான உயர் கல்வி வழிகாட்டுதல் கருத்தரங்கு

### UG COURSES

*Attractive Fees Structure @ Very Affordable Price*

**BCA.**, | **B.Sc.**, Computer Science
**B.Sc.**, Artificial Intelligence & Data Science
**B.Sc.**, Visual Communication | **B.Sc.**, Bio Technology
**B.Sc.**, Textile & Fashion Designing
**B.Sc.**, Hotel Management & Catering Science
**BBA.**, | **B.Com.**, | **B.Com.**, Computer Applications
**B.Com.**, Accounting & Finance | **B.Lit.**, Tamil

**Eligibility For UG A LEVEL 3 PASS**

**For Foundation programm O Level Pass**

### PG COURSES

**MA.**, English | **MA.**, Tamil* | **M.Com.**,
**M.Sc.**, Computer Science | **M.Sc.**, Maths
**M.Sc.**, Textile & Fashion Designing

**THAI GLOBAL BUSINESS ADMINISTRATION TECHNOLOGICAL COLLEGE, THAILAND**

**DIPLOMA IN TOURISM MANAGMENT**
2 year | Pass in 'A' Level
1st Year : Study in India / Srilanka | 2nd Year : Study in Thailand
(5 Months Theory & 7 Months Internship with stipend)

**SIDDHA VETHA UNIVERSITY, USA**
Certificate ? Diploma Courses (Credit Based)
- Youth Career Accelerator (YCA)
- Specialized Courses in Various disciplines

**Saito University,** Malaysia.
1 YEAR ONLINE
MBA DEGREE COURSE Pass in UG

**BHARATHIDASAN UNIVERSITY LEARNER SUPPORT CENTER (IAC-001645)**

**A seminar will take place on 10.04.2024 at 9.00 am**
**presented by Prof.Raja (SSM Educational Institutions)**
Venue : **Angel International School**
**Methers Lane, Manipay, Jaffna**
SEMINAR CONTACT: MERVIN - 077 14 78 069
ANGEL INTERNATIONAL SCHOOL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் துணை



## புங்குடுதீவு அருள்மிகு கண்ணகை அம்மன் என வழங்கும்
# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
# வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2024

எம் வினை தீர்க்க கடல் மீது
பேழை தனில் மிதந்து வந்து
பல நூற்றாண்டுகளாய் புங்கைநகர் கரைமீது
கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம் அன்னையே!
உன் பாதார விந்தங்களை சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்.

### அம்பிகை அடியார்களே!

சிவபூமியாம் இலங்கையிலே சைவம் தழைத்து விளங்கும் யாழ் மண்ணின் தென்னகத்தே சிவசீலர்களும், கொடையில் சிறந்த வணிகப் பேராளர்களும், கல்வியும், கலைகளும் கைவரப் பெற்ற பேரறிஞர்களும் நிறைந்த புங்கை நகரினிலே கண்ணகைபுரம் கண்ணகை அம்மன் எனப் போற்றப்படும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் அம்பாளின் திருவருளால் நிகழும் மங்களகரமான சோபகிருது வருஷம் பங்குனி மாதம் 27ம் நாள் (09.04.2024) செவ்வாய்க்கிழமையன்று கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் காலை, மாலை உற்சவங்கள் எனச் சிறப்பாக இவ்வருடமும் நடைபெறத் திருவருள் கூடியிருப்பதால் இவ் உற்சவ காலங்களில் அம்பிகை அடியார்கள் அனைவரும் ஆசார சீலராய் வருகைதந்து அம்பாளின் திருவருளைப் பெற்றுச் சகல செல்வயோகம்மிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

| | | |
|---|---|---|
| பங்குனி 27 ம் நாள் | 09.04.2024 செவ்வாய்க்கிழமை | காலை 6.00 மணிக்குக் கிரியைகள் ஆரம்பமாகிப் பகல் 11.00 மணிக்குத் துவஜாரோகணம் (கொடியேற்றம்) நடைபெறும். |
| சித்திரை 9 ம் நாள் | 22.04.2024 திங்கட்கிழமை | முற்பகல் 10.00 மணிக்கு விநாயகப் பெருமான், முருகப் பெருமான், ஸ்ரீ இராஜேஸ்வரி அம்பாள் ஆகிய மூர்த்திகள் அழகிய மூன்று சித்திரத் தேர்களில் ஆரோகணித்து வலம் வரும் கண்கொள்ளாக் காட்சி இடம்பெறும் |
| சித்திரை 10 ம் நாள் | 23.04.2024 செவ்வாய்க்கிழமை | முற்பகல் 6.00 மணியளவில் சமுத்திர தீர்த்தம் நடைபெறும். மாலை திருவூஞ்சல் துவஜாஅவரோகணம் (கொடியிறக்கம்) மற்றும் சண்டேஸ்வர உற்சவம் நடைபெறும். |

### தினமும் காலை

* 6.00 மணிக்குத் திருவனந்தல பால் பூஜை
* 7.00 மணிக்கு அபிஷேகம்
* 8.00 மணிக்கு விசேட பூஜை
* 9.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
அம்பாள் திருவீதியுலா

### தினமும் மாலை

* 4.00 மணிக்கு சாயரட்சைப் பூஜை
* 4.30 மணிக்கு விசேட பூஜை
* 5.00 மணிக்கு கொடித்தம்ப பூஜை
* 5.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை
அம்பாள் திருவீதியுலா

**திருவிழாக் காலங்களில் தினமும் மகேஸ்வர பூஜை (அன்னதானம்) நடைபெறும்**

கண்ணகைபுரம், புங்குடுதீவு - 10
தொ, பே.: 021 315 6666 / 077 717 4279
வெப் : www.kannakalamman.com /
ஈ - மெயில்: tempe@kannakaiamman.com

ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையினர்,
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்


"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org









## பற்சுகாதாரப் பரிசோதனை

கிளிநொச்சி, ஏப்.7

வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தில் பற் சுகாதாரம் தொடர்பான பரிசோதனைகள் கடந்த வாரம் நடைபெற்றன.

பாடசாலையிலுள்ள சகல மாணவர்களுக்கும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பற்களில் இருக்கக்கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகளும் காணப்பட்டன.

ஒவ்வொரு தவணையும் இவ்வாறான செயற்பாடுகளைச் செய்வதன் மூலமாக மாணவர்களின் வாய்ச் சுகாதாரம் பேணப்படுவதுடன், ஆரோக்கியமாக கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. அதனால் இச் செயற்பாட்டை தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும் என்று பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஏ-53)



யாழிசைக் கவித்தடாகத்தின் ஏற்பாட்டில், கவிஞர் உடுவிலூர் கலாவின் 'அரும்புகள் உலகம்' எனும் நூல் அறிமுகவிழாவும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும், சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றன. நிகழ்வில் முள்ளியவளையைச் சேர்ந்த ஆசியத் தடகள விளையாட்டு வீராங்கனை திருமதி அகிலத்திருநாயகி ஸ்ரீதயானந்தபவனும் கௌரவிக்கப்பட்டார். (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 150ஆவது ஆண்டு
# தொடக்க விழா

சாவகச்சேரி, ஏப். 7

டிறிபேர்க் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு தொடக்க விழா, பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. (ப-159)

# மரண அறிவித்தல்

## அமரர் கந்தசாமி மோகனகுமார் (மோகன்)



**தோற்றம்** 13.01.1963 **மறைவு** 05.04.2024

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி மோகனகுமார் அவர்கள் 05.04.2024 வெள்ளிக் கிழமை அன்று அகால மரணமடைந்து விட்டார். அன்னார் கந்தசாமி- தனலட்சுமி தம்பதியரின் மகனும் சந்திரகுமார், விஜயகுமாரன், பவானி (ஜேர்மனி), சாந்தகுமார், விஜயமாலா, தவமலர் ஆகியோரின் அன்புச்சகோதரரும் ரஞ்சினிதேவி, கானசரஸ்வதி, பெர்ணான்டோ, காந்தரூபி, சிவலோகநாதன் அன்பழகன் ஆகியோரின் மைத்துனரும் தர்சிகா, பானுஜா, தனோஜா, மோகானுஜன், ஆகியோரின் சிறியதந்தையும் லதுஷா, மதுஷன் ஆகியோரின் பெரியப்பாவும் மரியா, றோனுசன், கம்சிகா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 07.04.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகாக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**289, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்.
077 556 5910**

(CS 28383) V-1

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை வீதியில் வாழ்வகத்திற்கு முன்பாக 36 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- 18 அடிப்பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நன்னீர் ஊற்று சூழல்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- மருதனார்மடம் இராமநாதன் கலைக் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ளது.
- ஒரு பரப்பின் விலை 35 லட்சம்
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம்:
  காலை 06.00 மணிதொடக்கம்
  மாலை 06.00 மணிவரை

**தொடர்புகளுக்கு:
ஜெயம்
077 814 7389, 077 986 5457**

(CS 28506) S-1

# மரண அறிவித்தல்



**தோற்றம்** 24 . 12 . 1939 **மறைவு** 06 . 04 . 2024

## பண்டிதை திருமதி தேவராஜா நாகரத்தினம்

**(ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்)**

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பண்டிதை திருமதி தேவராஜா நாகரத்தினம் அவர்கள் நேற்று (06.04.2024) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார், அமரர் பொன்னம்பலம் தேவராஜாவின் (ஓய்வு பெற்ற ஓவசியர்) மனைவியும், அமரர் குழந்தைத்தம்பி சின்னத்தங்கைச்சியின் பாசமிகு மகளும், அமரர் பொன்னம்பலம் இராசம்மாவின் பாசமிகு மருமகளும், திரு.தே.திருமுருகராஜன் JP (ஆசிரியர், யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, முன்னாள் பிரதேசசபை உறுப்பினர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை), தே.திருமகள் (ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), தே.திருக்கணேசராஜன் (கணேசன் - ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), செ.திருஞானகௌரி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தி.ஜசந்தா (ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), Dr.சீ.செல்வநாயகம் (சட்டத்தரணி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தி.கம்சாயினி (யாழ்.பல்கலைக்கழகம் 2ம் வருடம்), தி.ஹருசன் (மாணவன், தொழில்நுட்பக் கல்லூரி), செ.நிஷாயினி (மாணவி, உடுவில் மகளிர் கல்லூரி), செ.அஸ்வினி (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும், அமரர் பரராஜசிங்கம், அமரர் மயில்வாகனம் மற்றும் இரத்தினசபாபதி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகராசா, சகுந்தலாதேவி, தியாகராசா, திரௌபதாதேவி, சர்வானந்தராஜா மற்றும் பத்மாவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 01.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 959 0541
077 899 7978
077 125 3838**

**தகவல்:
குடும்பத்தினர்.**

(CS 00139) S-1

# மரண அறிவித்தல்



**தோற்றம்** 03 . 06 . 1955 **மறைவு** 06 . 04 . 2024

## கணபதிக்குருக்கள் திருஞானசம்பந்தமூர்த்தி

நெடியகாடு வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு புலவனார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிக் குருக்கள் திருஞானசம்பந்தமூர்த்தி அவர்கள் நேற்று (06.04.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிக்குருக்கள்-நகுலாம்பிகை தம்பதியரின் அருமைப்புத்திரனும் ஆறுமுகக்குருக்கள்-சிவகாமசுந்தராம்பாள் தம்பதியரின் மருமகனும் அனுசியாதேவியின் அன்புக் கணவரும், சிறிமுருகன், கௌரி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் நந்தகுமார், வைஸ்ணவி ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவகணேசியின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.04.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.
தொடர்பு: 076 869 9867**

(CS 00133) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# முதுகெலும்புண்டா அநுரவுக்கு?

ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து தென்னிலங்கையின் பரப்புரைகள் ஆரம்பமாகிவிட்டன. ஜனாதிபதித் தேர்தல் என்றால் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளைக் குறிவைத்து வலைகளை அவர்கள் விரிப்பது வழக்கம். தமிழர்களுக்கு அதைச் செய்வோம் இதைச்செய்வோம் என்று சொல்லி வாக்குகளைச் சுருட்டிக்கொண்டு 'அம்போ' எனக் கைவிடுவதுதான் வழமையாக இருந்து வருகின்றது. இம்முறை தென்னிலங்கை ஜனாதிபதித் தேர்தல் களம் சற்றுவித்தியாசமாகியிருக்கின்றது. தென்னிலங்கையின் வாக்குகள் தற்போதைய நிலையில் பிளவுறும் என்பதால் யாருடைய வெற்றியும் உறுதியான நிலையில் இல்லை. எனவே இம்முறை தமிழ் மக்களின் வாக்குகள் தேவை என்ற நிலை உருவாகியிருக்கின்றது. தமிழ் மக்களோ, கடந்த கால கசப்பான அனுபவங்களின் அடிப்படையில் தமிழ்ப்பொது வேட்பாளர் தொடர்பிலேயே அதிகளவில் சிந்திக்கின்றனர். போரின் பின்னரான முன்னைய தேர்தல்களிலும் தமிழ் வேட்பாளர் ஒருவர் களமிறங்கியிருந்தாராயினும் தமிழ் மக்களின் ஒருமித்த நிலைப்பாடாக அது அமையவில்லை. ஆனால் இம்முறை அப்படியான நிலைமையில்லை. தென்னிலங்கையால் இனியும் ஏமாற்றப்பட முடியாதென்பதில் தெளிவாகவுள்ள மக்கள் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு உறுதியாக ஆதரவளிக்கக் கூடும்.

இந்த நிலையில் கடந்த காலங்களைக்காட்டிலும் இம்முறை தமிழ் மக்களின் வாக்குகளை தங்களுக்கு உறுதிப்படுத்திக்கொள்வதற்கு தென்னிலங்கை வேட்பாளர்கள் முயல்வார்கள். அதன் ஓர் அங்கமாக தேசிய மக்கள் சக்தியின் பெயரில் களமிறங்கும் ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் யாழ்ப்பாணம் பயணம் அமைந்திருந்தது.


இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட வடக்கு - கிழக்கு இணைப்பை நீதிமன்றத்தை நாடி பிரித்த பெருமை ஜே.வி.பி. யையே சாரும்.சமாதான ஒப்பந்தத்தை முறித்து நாட்டைப் போரை நோக்கி ஆட்சியாளர்களைத் தள்ள வைத்த கட்சியும் அதுதான். இறுதிப்போரின்போது மூர்க்கத்தனமாக அப்போதைய ஆட்சியாளர்களான ராஜபக்சக்களுக்கு ஆதரவளித்த கட்சியும் ஜே.வி.பி. தான். இப்படிப்பட்ட பின்னணியுடைய ஒரு கட்சி தனக்கு வாக்குக்கோரி இன்று வந்து நிற்கின்றது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு வரைபடத்தை முன்வைக்காமல் வெறுமனே வாக்குகளைக் கேட்கின்றது. அதைத் தருவோம் இதைத்தருவோம் என்று மற்றவர்கள் போன்று வாக்குறுதி வழங்கத் தயாரில்லை எனச் சொல்லும் அந்தக் கட்சி, தமிழர்களுக்கு இதைத்தான் செய்வோம் என்பதைக் கூடச் சொல்லமுடியாத கட்சியாகவே இங்கு கால்பதித்து நிற்கின்றது.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கான காரணம் என்னவென்பதைத் தெரிந்தும் அதைத் தீர்ப்பதற்கு மனமில்லாமல் அந்தக் கட்சி இருக்கின்றது.

ஜே.வி.பி.யின் தலைவர் அநுர யாழ்ப்பாணத்தில் உரையாற்றும்போது, 'வடக்கு - கிழக்கு மக்களின் ஆணை இல்லாத ஆட்சி நாட்டை முன்னேற்றாது. ஆகையால் அனைத்து மக்களின் ஆணையுடனான ஆட்சி அமையப்பெறவேண்டும். அவ்வாறு இன,மத பேதமில்லாத ஆட்சி அமையவேண்டுமாக இருந்தால் தமிழ்த் தலைவர்கள் எம்மை ஆதரிக்கவேண்டும்' என்று குறிப்பிட்டார்.

இந்த நாட்டின் அரசமைப்பே வடக்கு -கிழக்கு மக்களின் சம்மதமில்லாமலேயே திணிக்கப்பட்டது. முதலில் வடக்கு -கிழக்கு மக்களின் ஆணையுடன் ஓர் அரசமைப்பை உருவாக்குங்கள். அதன் பின்னர் ஆட்சி அமைப்பதற்கு அந்த மக்களிடம் ஆணை கேட்கலாம். இதைச் செய்வதற்கு அநுரவுக்கு முதுகெலும்பு இருக்கின்றதா?





# மயிலத்தமடு காணி அபகரிப்பில் பொருளாதார முனைப்பு பாதிப்பு

சர்வதேச நெருக்கடி கண்காணிப்புக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்.7

**மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை அபகரிப்பு விவகாரத்தின் பின்னணியில் இருக்கக்கூடிய 'பொருளாதார ரீதியிலான முனைப்புகள்' தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. முதலாவது மட்டத்தில் இடம்பெறும் அரசியல் ரீதியிலான அநீதி குறித்தே அனைவரும் அவதானம் செலுத்துகின்றனர்.**

-இவ்வாறு சர்வதேச நெருக்கடி கண்காணிப்புக் குழுவின் இலங்கை ஆய்வாளர் அலன் கீனன் சுட்டிக்காட்டியுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மயிலத்தமடு, மாதவனை கால்நடைப் பண்ணையாளர்களின் போராட்டம் ஆரம்பமாகிக் கடந்த முதலாம்திகதியுடன் 200 நாள்கள் பூர்த்தியடைந்துள்ளன. பயிர்ச்செய்கையாளர்கள் தொடர்ச்சியான அத்துமீறலை கட்டுப்படுத்துவதற்கு இதுவரையில் அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த விவகாரத்தின் பின்னால் இருக்கக்கூடிய பொருளாதார ரீதியிலான முனைப்புகள் தொடர்பில் மிக அரிதாகவே ஆராயப்படுகிறது. இந்த விடயம் இன அடிப்படையிலான பிளவுகள் அரசியலுடன் தொடர்புடைய அதிகாரத்தையும், நலன்களையும் அடைந்துகொள்வதற்கான ஆயுதமாகவே பிரயோகிக்கப்படுகிறது.
- என்றார். (ச-இ)

# கடன் மறுசீரமைப்புச் செயன்முறை விரைவில் இணக்கப்பாடு ஏற்படும்

## ஐ.எம்.எப். நம்பிக்கை

கொழும்பு, ஏப்.7

இலங்கை முன்னெடுத்துவரும் கடன் மறுசீரமைப்புச் செயன்முறையின் அடுத்தகட்டமாக வெளியகத் தனியார் கடன் வழங்குநர் குழுவுடனான பேச்சுகள் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு, அவர்களுடன் பொருத்தமான இணக்கப்பாடு எட்டப்படும் என சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணயநிதியத்தின் மாதாந்த ஊடக சந்திப்பு கடந்த வியாழக்கிழமை வொஷிங்டனில் நடைபெற்றது. அதில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த சர்வதேச நாணயநிதியத்தின் தொடர்பாடல் திணைக்களப் பணிப்பாளர் ஜூலி கொஸாக் மேற்கண்டவாறு தெரிவித்தார். (எ-இ)

# இந்தவருடத்தில் டெங்கு குறைவு!

ஏனைய வருடங்களைவிட இந்த வருடம் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் அதனால் ஏற்படும் இறப்பு வீதமும் குறைந்துள்ளது என்று சுகாதார இராஜாங்க அமைச்சர் மருத்துவர் சீதா அரம்பேபொல தெரிவித்துள்ளார்.

காலநிலையும் இதில் தாக்கம் செலுத்தியது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# வட்டி செலுத்திய இலங்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதிலிருந்து கடந்த பெப்ரவரி மாதம் வரையான காலப்பகுதியில் அரசாங்கம் 1909.7 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுக் கடன் மற்றும் வட்டியைச் செலுத்தியுள்ளது என்று ஜனாதிபதிப் பணிப்பாளர் நாயகம் ரஜித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார். (எ-இ)

# புத்தாண்டுக் கொண்டாட்டம் எல்லைமீறினால் நடவடிக்கை

புத்தாண்டுக் கொண்டாட்டங்களின்போது கலாசாரத்துக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் களியாட்டங்கள் இடம்பெற்றால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று புத்தசாசன, மத கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார். புத்தாண்டுக் கொண்டாட்டங்களை நடத்துவது தொடர்பிலான ஆலோசனைகள் அனைத்து மாவட்ட செயலாளர்கள் ஊடாக பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)

**நாளை**

**08.04.2024**

**திங்கட்கிழமை**

**பங்குனி 26**

சுபநேரம் : [illegible] - 01.37
ராகுகாலம் : 07.37 - 09.07

**நாளொரு நல்வார்த்தை**

**தோல்விகளுக்கு இடையில்தான் வாய்ப்புகள் மறைந்திருக்கின்றன அதனால் தோல்விகளைக் கண்டு அஞ்சாதே!**

**–ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்–**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

சரவணை மண்ணில்
10.06.1963

சிவனடியில்
05.04.2024

## சிவசாமி கிருபாகரன்

**(BSc, MEd, SLPS - I)**

**(இளைப்பாறிய அதிபர் வேலணை மத்திய கல்லூரி, முன்னாள் அதிபர் இனுவில் இந்துக்கல்லூரி, முன்னாள் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கணிதம் - வலிகாமம் கல்வி வலயம்)**

முன்னாள் ஆசிரியர் திருகோணமலை T/St Marys College , M/Mallavi Central College , J/Velanai Central College, J/Thampatti G.T.H.S, J/Saravanai Nageswary M.V



சோளாவத்தை வேலணை வடக்கை பிறப்பிடமாகவும், கோவில் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசாமி கிருபாகரன் நேற்றுமுன்தினம் (05.04.2024) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசாமி - செந்தமிழ்ச்செல்வி தம்பதிகளின் இளைய மகனும் காலஞ்சென்ற தம்பு தனநாயகம் மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் மூத்த மருமகனும், நமணி அவர்களின் அன்புக் கணவரும், சிவசங்கர், சிவமைந்தன், தேனுகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திவாணி சிவசங்கரின் பாசமிகு மாமனாரும், தெய்வச்சிலை, ஜெகநாதன், தயாபரன், பகீரதன், பார்த்தசாரதி, அறிவரசி, அன்பரசி ஆகியோரின் சகோதரனும், ஜெகநாதன், ஞானசக்தி, சந்திரவதனி, மதிவதனி, ஜெகராயசேகரம், கணேசலிங்கம் ஆகியோரின் சகோதரவழி மைத்துனரும், வனிதா, கிருபாகரன், தயாபரன் ஆகியோரின் துணைவி வழி மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று 10.00 மணியளவில் பூதவுடல் வேலணைக்கு அஞ்சலிக்காக எடுத்துச்செல்லப்பட்டு தகனக்கிரியைகள் சரவணை புன்னங்கட்டி இந்துமயானத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**147/4 கோவில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
குடும்பத்தினர்
**074 071 1993 / 077 614 0269**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DLB
DEVELOPMENT LOTTERIES




## அபிவிருத்தி லொத்தர் சபை

# வரலாற்றில் பெற்ற அதிக இலாபம்

## 2023 ஆம் வருடத்தில் பதிவாகியுள்ளது...!

## வாடிக்கையாளர்களுக்கு ரூ.13.4 பில்லியன் பெறுமதியான பரிசுகள்



### ரூ. 3.6 பில்லியன் ஜனாதிபதி நிதியத்துக்கும் ரூ. 5.1 பில்லியன் அரசாங்கத்துக்கும் பெற்றுக் கொடுத்து வரலாற்றில் தடம் பதித்த முழுமையான பங்களிப்பு

நாட்டின் பிள்ளைகளுக்கு அறிவையும் ஆரோக்கியத்தையும் பெற்றுக் கொடுத்து பல்லாயிரம் மக்களின் வாழ்க்கைக்கு ஒளியூட்டும் உன்னதமான இலக்கை நோக்கமாகக் கொண்ட அபிவிருத்தி லொத்தர் சபை 2023 ஆம் ஆண்டு **வரலாற்றில் தடம் பதித்த அதிக இலாபத்தை ஜனாதிபதி நிதியத்துக்கு வழங்கியுள்ளது.**

இதற்கான நிதியை **மாண்புமிகு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களிடம்** கையளிக்கும் நிகழ்ச்சி அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி அஜித் குணரத்ன நாரகல மற்றும் பொது முகாமையாளர் அனுர ஜயரத்ன அவர்களினதும் தலைமையில் முகாமைத்துவத்தின் பங்கேற்போடு அண்மையில் நடைபெற்றது.

வெற்றிக்கு பங்காற்றிய அனைவருக்கும் நன்றி...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் உதவியாளர் தேவை

வல்வெட்டியில் உள்ள பெண் ஒருவருக்கு உதவியாக **பெண் உதவியாளர் தேவை.**
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**076 074 2664**

(CS/54638) J-1

## மணமக்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 2002 ஆம் ஆண்டு அவிட்டம் 8 இல் செவ்வாய் (பல்கலைக்கழக மாணவி)
**மணமகளுக்கு மணமகன் தேவை.**
1983 இல் பிறந்த ரோகினி 2 இல் செவ்வாய்
**அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.**

தொடர்பு: **077 425 6492**

(cs 42165/2 x 5)

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில்**
அந்தோனியார் கோவிலில் இருந்து 350m தூரத்தில்
**3 பரப்புக் காணியுடனான வீடு விற்பனைக்கு உண்டு.**
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்பு கொள்ளவேண்டாம்)

தொடர்பு:- **077 614 6434**

(CS/54628) J-1

## வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி, விதானையார் வீதியில் 3 1/2 பரப்புக் காணியில், சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

**077 614 6434**

(CS/54629) J-1

## யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (வ -து)

பதிவு இல - J / 1609

## சங்க கட்டடம் வாடகைக்கு

எமது சங்கத்தில் 144 அடி நீளமும் 80 அடி அகலமும் கொண்ட (11520 சதுர அடி) விஸ்தீரணமுடைய கட்டடம் வாடகைக்கு விடப்படும்.

### சங்க கூரையை சோலர் பொருத்துவதற்கு வாடகைக்கு விடல்

1. எமது சங்கத்தில் 165 அடி நீளமும் 50 அடி அகலமும் கொண்ட சீற் கூரை
2. எமது சங்கத்தில் 160 அடி நீளமும் 60 அடி அகலமும் கொண்ட சீற் கூரை

மேற்படி இரண்டு கூரைகளையும் சோலர் பொருத்துவதற்கு வாடகைக்கு விடப்படும்.

**தலைவர்,**
**யா.மா.பு.நெ.கூ.சங்கம்,**
**021 321 8263**
**077 504 4671**

**இருபாலை வீதி,**
**கோண்டாவில்.**

(cs 42143) (N-1)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலும்



பிறப்பு 27.11.1948 — இறப்பு 10.03.2024

கடந்த 10.03.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர் முத்துராசா சற்குணதேவி**

அந்தியேட்டிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை (09.04.2024) பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் நாம் துயருற்று இருந்தபோது எமக்கு பல வழிகளிலும் உதவி செய்தும், ஆறுதல் கூறியும் மற்றும் சுகவீனமுற்று இருந்த நேரத்தில் உதவிய உயர் அதிகாரிகள், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**துயர் பகிரும்**
**கணவர் (முத்துராசா - முத்தண்ணா),**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
முத்துராசா - 077 310 1959

**இல. 216 கரடிப்போக்கு,**
**கிளிநொச்சி.**

(CS/28258) J-1

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



**தோற்றம்** 13.05.1933 — **மறைவு:** 21.03.2023

அமரர்

## இராசபூபதி நாகேந்திரம்

**திதி - 07.04.2024**

முகம் காணும் முன்னே எம்மை நேசித்து
முதல் முத்தம் தந்து எம்மை சுவாசித்து
முப்பொழுதும் எம்மை எண்ண தினம் போதித்து
முதலும் முடிவுமாய் எம்மை யாசித்தாய்!
பட்டம் புகழ் பல பெற்று
பவனத்திலே பவனி வர
பத்துத் திங்கள் பாடுபட்டு
பத்திரமாய் பெற்றெடுத்தாய்!
பாசத்துடன் உனைக்காக்க நினைக்கின்றோம்
பாவையைப் போல் அனுதினமும் இரசிக்கின்றோம்
பாரினிலே உனை எண்ணி வியக்கின்றோம்
பாதியிலே நீ சென்றாய் தவிக்கின்றோம்
இன்றோடு நீ சென்று ஓராண்டு
இதயத்துள் உயிர்வாழ்வாய் பல்லாண்டு
இனியவளே நீதான் என் பூச்செண்டு
இங்கிருந்து சென்றுவிட்டாய் எமைக்கொண்டு
உன்னாலே விழியெல்லாம் நீர் வெள்ளம்
உன்னிடத்தில் உள்ளது பார் எம் உள்ளம்
உண்மையிலேயே நீதானே பெரும் சக்தி
உன் ஆத்மா சாந்தியடையட்டும் ஓம் சாந்தி!!!

இன்று 07.04.2024 அன்னாரின் முதலாவது ஆண்டு ஆத்மா சாந்திப் பிரார்த்தனை அவரது வீட்டில் இடம்பெற்று, **141 கே.கே.எஸ் வீதி சுன்னாகத்தில் உள்ள திசா ஹோட்டலில் மதிய போசனமும் இடம் பெறும்.** உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சுன்னாகம்.** **குடும்பத்தினர்**

(CS/54642) J-1

## நெஞ்சம் கனக்கிறது ... ஆழ்ந்த இரங்கல்கள்

வேலணை மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர்

## சிவசாமி கிருபாகரன்

சேவைக்காலம் 2011 – 2023

**மண்ணில்** 10.06.1963 — **விண்ணில்** 05.04.2024



எங்கள் வேலணை மத்திய கல்லூரியின்
முன்னாள் முதல்வரின் மரணச் செய்தி
எங்கள் ஆத்மாவை ஒருகணம் உலுப்பி விட்டிருக்கிறது..
நாம் அவரிடம் கண்டு வியந்தவைகளும்
கற்றுக் கொண்டவைகளும் ஏராளம் ஏராளம்
ஒரு பன்முக ஆளுமை
பல் துறைசார் அறிவு
சிந்தனையைச் செயலாக்கும் பண்பு
அஞ்சாத நெஞ்சம் அடிபணியா சிங்கம்
சாணக்கியம் மிக்க செயற்றிறன்
மண்மீது கொண்ட அளவற்ற பற்று
மாணவர் உயர்ச்சியே அவர் மூச்சு
கல்லூரி வளாகமே அவர் வாழ்வு
இன்னும் அவர் மரணத்தை மனம்
ஏனோ நம்ப மறுக்கிறது
உங்கள் ஓயாத பணிக்குத் தான்
ஓய்வு என்றிருந்தோம்
உங்கள் பணி போதுமென உங்கள்
வாழ்வுக்கே ஓய்வு கிடைக்குமென
சிறிதும் நினைக்கவில்லை
சிவகாமி சமேத நடராஜர் திருவடியில்
உங்கள் ஆத்மா சாந்தி பெறட்டும்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**அன்னாரின் பிரிவால் துயருறும்**
**கல்லூரிச் சமூகம்,**
**வேலணை மத்திய கல்லூரி.**

(CS 54649) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 7

அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 84 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம், ஆண்களுக்கான மரதனோட்ட நிகழ்வுகள், நிலைய சிறார்களுக்கான ஓட்ட நிகழ்வுகள், நிலைய அங்கத்தவர்களுக்கான மெதுவான மோட்டார் சைக்கிள் ஓட்ட நிகழ்வுகள் என்பன குறித்த நிலைய முன்றிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு இடம் பெறவுள்ளன.

மேலும், மாணவர்களுக்கான ஆங்கிலமொழிப் பரீட்சைகள் எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் சதுரங்கச் சுற்றுப்போட்டி மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் முருகமூர்த்தி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளன. போட்டிகளில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மேற்படி நிலையத்தினர் கேட்டுள்ளனர். (ப)


## Be a Factor in Shaping the Nation's Economy
### and grow your career with confidence

"SDB bank is a licensed specialized bank regulated by the Central Bank of Sri Lanka, with a listing on the Main Board of the Colombo Stock Exchange and a Fitch Rating of BB + (lka). maintaining 94 branches islandwide and over 5000 inter-bank network ATM points, offering a contemporary range of banking plus financial services to its Retail, SME, and Business banking clients. Guided by its maxim 'Where you're valued', plus the bank's reputation as the apex entity in the development banking and SME space, a sector accounting for a substantial 50% of Sri Lanka's total GDP, the bank offers equal support to individual, business-oriented, and development-focused goals, transcending what is purely transactional and valuing each customer for their uniqueness as individuals. The bank's ascendancy as one of Sri Lanka's top-rated modern banks with considerable brand value has been marked by numerous accolades including being placed in the Top-50 in 'Sri Lanka's 100 most valuable brands' list for 2020 by global brand valuation consultancy Brand Finance; in the Top-50 in LMD's Inaugural Edition of 'Most Awarded'; and in the coveted 'LMD 100 - Sri Lanka's Leading Listed Companies' for the period 2019/20."

## We are looking for Legal Officer
### (Northern Region)

Job Profile
This position is responsible for providing legal services, advices & support to internal service departments & branches.

Duties & Responsibilities
- Ability to draft pleadings and handle various types of cases such as Money recovery actions, debt recovery actions, Mortgage Bond Actions etc.
- File proxies and appearing in courts on behalf of the bank
- Thorough knowledge in conveyancing and possess notarial license to practice in English and Tamil languages in the respective Judicial zone.
- Drafting & reviewing Legal Contracts, Corporate Agreements, Security Documents

Candidate Profile
- Attorney-at-Law and Notary Public with license to practice in English and Tamil in the respective judicial Zone.
- A bachelor's degree in Law and/or Master's Degree in Law will be an added qualification
- Minimum of 02 years' experience as a legal officer preferably in the financial industry
- Excellent interpersonal, communication & negotiation skills with ability to work in cross functional teams
- IT literacy

An attractive remuneration package commensurate with experience and fringe benefits in par with the industry standards are available for the right persons. Interested candidates are invited to submit their curriculum vitae within 07 days of this advertisement to careers@sdb.lk mentioning the position on the subject line of the e mail. Kindly note that only shortlisted candidates will be contacted.

SDB bank #whereyouarevalued

SANASA Development Bank PLC is a licensed specialised bank, supervised by the Central Bank of Sri Lanka. Fitch Rating of BB+(lka). Reg. No: PB82PQ

**முறிகண்டியில் அமைந்துள்ள சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலைகளுக்கு ஆட்கள் தேவை**
(தங்கி நின்று வேலைசெய்யக்கூடியவர்)

- முகாமையாளர்
- சமையற்காரர்
- காசாளர்
- சமையல் உதவியாளர்
- சுத்திகரிப்பாளர்
- உணவு பரிமாறுபவர்

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு
நேர்முகத்தேர்வு நடைபெறும்
(cs 00132) (N-1)

**077 711 4226**

## விற்பனைக்கு

உப்புக்கேணி வீதி, பெரிய மாவடி சாவகச்சேரியில்
6 பரப்புக் காணியில் அமைந்த வீடு
**"குமாரபவனம்" விற்பனைக்கு உண்டு.**
கிணறு, இரண்டு குழாய் கிணறு, 2 குளியலறைகள் அடங்கிய வீடு. (கச்சாய் வீதிக்கு அருகாமையில்)
தொடர்புகளுக்கு :
Whatsapp **0033 767 140 453**
**077 494 8151**
(CS28244) J-1

## வீடு வாடகைக்கு

150 பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி
திருநெல்வேலியில் அமைந்துள்ள
4 அறைகளையும், அதி உயர் வசதிகளையும்
கொண்ட Commercial Space available for rent in Good Location.
**நிறுவனங்கள் / அலுவலகம்**
நடத்துவதற்கு உகந்தது.

**076 856 0549, 076 857 3798**

## GLOBAL VINYL
## விற்பனை உத்தியோகத்தர்கள்

நாங்கள் தரை விரிப்புகள், வாகனத் தரைவிரிப்புகள் போன்றவற்றை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் குழுவாக உள்ளோம், மேலும் இலங்கையில், மேற்கூறப்பட்ட தயாரிப்புகளுக்கான சந்தைத் தலைவர்களாக நாங்கள் இருக்கிறோம்.

பின்வரும் பகுதிகளில் எங்களின் விற்பனை உத்தியோகத்தர்களாக நியமிப்பதற்கு ஆற்றல் மிக்கவர்களைத் தேடுகிறோம்.

**யாழ்ப்பாணம்/வவுனியா மற்றும் மன்னார் பகுதிகள்:**

மேற்கண்ட பகுதிகளில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு கூடுதல் சலுகை கிடைக்கும்.

***தகுதிகளும் அனுபவங்களும்***
- க.பொ.த. (சா.த.) க்குக் குறைவடையாத கல்வித் தகைமை இருத்தல்.
- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அனுபவம்
- ஹாட்வெயார் மற்றும் FMCG வர்த்தகத்தின் வெளிப்பாடு (அத்தியாவசியம் இல்லை)

***அனுகூலங்கள்***
- கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் இலக்கு அடிப்படையிலான ஊக்கத்தொகை
- தினசரி செலவுக் கொடுப்பனவு (பட்டா)
- வருடாந்தர போனஸ் முதலியவை
- கம்பனி தொலைபேசி அல்லது தொலைபேசி கொடுப்பனவு
- மருத்துவ காப்புறுதி
- அடிப்படை கொடுப்பனவு

***விண்ணப்பதாரர்கள் மோட்டார் சைக்கிள் ஒன்றினை வைத்திருத்தல் அவசியம். இதனால் எரிபொருளுடனான கொடுப்பனவொன்று கம்பனியால் செலுத்தப்படும்.***

இவை மிகவும் சாத்தியமான பகுதிகள் மற்றும் வேட்பாளர்கள் தங்கள் இலக்கு சாதனைகளின் அடிப்படையில் அதிக கமிஷன்கள்/ வருமானங்களை ஈட்ட முடியும்.

தயவு செய்து 10 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

Director
**Global Vinyl (Pvt) Limited**
208, Sea Street, Colombo 11
Email: careers@globalvinyl.lk
pathmasiri@globalvinyl.lk

Contact:
0777 86 20 45

## வீடு வாடகைக்கு

71, பலாலி வீதி, புன்னாலைக் கட்டுவன் தெற்கில்
(EUT தளபாட தொழிற்சாலைக்கு அருகில்)
புதிதாக அமைக்கப்பட்ட 3 அறைகளைக்கொண்ட
நவீன வசதிகளுடன் கூடிய
**வீடு வாடகைக்கு உண்டு.**
வாடகைக் கட்டணம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
(CS54999) J-1

**077 131 2987**

## வாடகைத்தாய் தேவை

**நல்ல ஆரோக்கியமான உடல்நிலை உடைய வாடகைத்தாய் தேவை.**
(தனிப்பட்ட இரகசியம் காக்கப்படும்).
(CS54480) J-1
தொடர்பு:- **074 046 5157**

# விற்பனைக்கு




**JCB 3CX மற்றும் 3DX பெக்ஹோ இயந்திரங்களுக்கான Bucket Tooth, Side Cutters, Cutting Edges மற்றும் Nut & Bolts விற்பனைக்கு.**

இன்றே அழையுங்கள் - **076 310 7534**
(CS.27214) (n-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு
16 • 04 • 1972

இறப்பு
06 • 04 • 2024

## மகேஸ்வரன் மதீசன்

**உரிமையாளர் (Mahanathy Tex, Jaffna Electricals Showroom, Sankamam Tex, Abi Pvt Ltd, Malabar Electrical, Colour Pluz)**

சரசாலை வடக்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் தற்போது. இந்தியா திருச்சி மாவட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரன் மதீசன் இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரன் (Jaffna Electricals) சரஸ்வதி தம்பதியின் மூத்த மகனும், காலஞ்சென்ற கணேசன் (நாவற்குழி), விஜயா தம்பதியின் அன்பு மருமகனும், குமுதினியின் (India) அன்புக் கணவரும், ஆபூர்வன் (UK), ஆதித்தியா (India), அபிநயன் (India), ஆதவி (India) ஆகியோரது அன்புத் தந்தையும், மதீதரன் (Mahesh and Sons), யசோதினி (US), சாமினி (UK), முகுந்தன் (Jaffna Electricals), ஆகியேரின் அன்புச் சகோதரனும், வித்தியசங்கர் (US), நிசாந்தன் (UK), சிவதாரணி (Colombo) வேதகி (Colombo) ஆகியோரது மைத்துனரும், சௌமியா (US), துளசிந்தன் (US), அயிறா (UK), நிலன் (UK), ஆகியோரின் அன்பு மாமனாரும், அட்சயன் (Colombo), அஸ்வித்தா (Colombo), அபிராம் (Colombo), ஆதன்யா (Colombo) ஆகியோரது பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**127/6 கோவில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மதீதரன் - 077 631 3571**
**முகுந்தன் - 077 773 8715**

(CR/42166) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக்குநீரிணையை நீந்திக் கடந்த சிறுவர்கள்




மன்னார், ஏப். 7

தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரம் வரையிலான பாக்குநீரிணையை இரண்டு தமிழகச் சிறுவர்கள் நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார்கள்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த நிஷ்விக் மற்றும் துரங்கி ஆராதனா ஆகியோரே பாக்குநீரிணையை கடந்த 2ஆம் திகதி நீந்திக் கடந்துள்ளார்கள்.

பிளாஸ்ரிக் பாவனையைத் தவிர்ப்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் றோட்டரிக்கழகத்தின் அனுசரணையுடன் இந்தச் சாதனையை அவர்கள் நிகழ்த்தினர். (ஒ-213)



சுன்னாகம், சிவன் சிறுவர் கழகத்தினரின் ஏற்பாட்டில் சுன்னாகம் சிவன் முன்பள்ளி மண்டபத்தில் கழகத் தலைவர் மாதுளா மதியழகன் தலைமையில், சர்வதேச மகளிர் தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட இறுதியாண்டு மாணவி கோபிகா, சமூக விழிப்புணர்வை மையமாக வைத்து எழுதிய 'பயணங்களில் இளைப்பாறுதல்' எனும் நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (ப-66)

## குருதிக் கொடை

யாழ்ப்பாணம், ஏப். 7

கொய்யாத்தோட்டம் நற்பணி மன்றத்தின் 4 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருதிக்கொடை நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப. 2 மணி வரை குருதிக்கொடை இடம்பெறவுள்ளது. (ப-66)




## ஆண்டு விழா

தொல்புரத்தில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்லத்தின் 17ஆவது ஆண்டு நிறைவு விழா, முதியோர் இல்லத்தின் பாலச்சந்திரன் அரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் அதிபர் ந.விஜயசுந்தரம் தம்பதிகள் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளனர். நிகழ்வில் திருமதி வி.நரேந்திராவின் நெறியாள்கையில் இசை நிகழ்ச்சியும், திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசனின் நெறியாள்கையில் நடன ஆற்றுகை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ப-66)




## அபிவிருத்தி லொத்தரானது 2023ஆம் ஆண்டில் சாதனைபடைத்த பணப்பரிசுத்தொகையாகிய 13.4 பில்லியன் ரூபா பரிசுப்பணத்தை வாடிக்கையாளர்களுக்கு வழங்கியது!!

40 ஆண்டு காலம் பூராகவும் இடைவிடா அதிர்ஷ்டத்தின் நம்பிக்கையினை பாதுகாத்த அபிவிருத்தி லொத்தர்சபை 2023ஆம் ஆண்டில் அவர்களின் லொத்தர் பயணத்தில் மேலும் ஒரு விசேட மைல்கல்லினை அடைந்துள்ளது. அது இத்தனைகாலம் அபிவிருத்தி லொத்தர்சபை வரலாற்றில் ஈட்டிய அதிகூடிய இலாபம் மற்றும் வெற்றியாளர்களுக்காக அதிகூடிய பரிசுப்பணத்தினை வழங்கி சாதனைபடைத்தமையாகும். இலங்கை மக்களுக்கு அதிர்ஷ்டத்தினை ஈட்டித்தரும் அபிவிருத்தி லொத்தர்சபை அதனுடன் நிறுத்தாமல் இவ்வாறான வெற்றிகளைப் பதிவுசெய்தமை உண்மையாகவே ஒரு பாரிய வெற்றியாகும்.

மேலும், இந்த நாட்டில் உள்ள நோயாளர் வாழ்க்கையினை ஆரோக்கியமாக்கிட அயரா கடமையினை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி நிதியத்திற்கு நிதிப் பங்களிப்பினை வழங்கிடும் ஒரே ஒரு நிதி நிறுவனம் அபிவிருத்தி லொத்தர்சபையாகும்

அவ்வாறே, எதிர்காலத்திற்காக செய்யக்கூடிய உயரிய முதலீடு கல்வி என்பதனால் அதற்காக இந் நாட்டின் குறைந்த வருமானமீட்டும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு வார்த்தையினால் கூறமுடியாத உன்னத பங்களிப்பினை வழங்கிடும் மஹபொல புலமைப்பரிசில் நிதியத்திற்கு நிதிப் பங்களிப்பினை வழங்கிட அபிவிருத்தி லொத்தர்சபை சக்தியாகவும் அமைந்துள்ளது.

அபிவிருத்தி லொத்தார்சபை மூலம் வெவ்வேறு தரப்பெயர்களின் கீழ் லொத்தர்கள் விற்பனை செய்யப்பட்டு கிடைக்கும் நிகர இலாபமானது ஜனாதிபதி நிதியத்திற்கு வழங்கப்படுகின்றது. அது மட்டுமன்றி லொத்தர் விற்பனை மூலம் நாற்திசையிலிருந்தும் வெற்றியாளர்களை உருவாக்கி அவர்களின் வாழ்விற்கு ஒளியூட்டுவது மட்டுமன்றி தற்பேது லொத்தர் விற்பனைக்காக எம்முடன் கைகோர்த்துள்ள 25,000 ற்கும் அதிமான விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை உதவியாளர்கள் தமது வாழ்வாதாரத்தினை ஏற்படுத்திக்கொள்வதும் இதன் மூலமாகும். அதன்படி, அபிவிருத்தி லொத்தர் சபை என்பது வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் மக்களின் வாழ்வில் ஒளியேற்றுகின்ற ஒரு நிறுவனமாகும்.

அதனை மேலும் தெளிவூட்டும் வகையில் 2023LD ஆண்டில் லொத்தர் வெற்றியாளர்களுக்காக 13.4 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமான பணத்தினை பரிசுகளாக வழங்கியுள்ளதாக அபிவிருத்தி லொத்தர்சபை அறிவிக்கின்றது.

அபிவிருத்தி லொத்தர்சபை மூலம் மேற்கொள்ளப்படும் லொத்தர்களின் வருமானத்தில் 50% க்கும் அதிகமான தொகையினை ஒதுக்குவது பரிசுப்பணத்திற்காகும். அத்துடன் நாளாவிய ரீதியில் கோடீஸ்வரர்கள், இலட்சாதிபதிகளை ஆயிரக்கணக்கில் உருவாக்கிடவும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

அபிவிருத்தி லொத்தர்சபை 2023ஆம் ஆண்டில் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் சாதனைபடைத்த வருமானத்தினை ஈட்டியுள்ளது. அதற்கமைய கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 13% இலாபச் சதவீதத்தினை ஈட்டி 3.6 பில்லியன் ரூபாவினை நிகர இலாபமாக அடைவதற்கு அபிவிருத்தி லொத்தர்சபைக்கு முடிந்துள்ளது.

கௌரவ நிதி அமைச்சர்கள், நிதி அமைச்சு மற்றும் தற்போதைய தலைமையின் வழிகாட்டுதலின் கீழ் அபிவிருத்தி லொத்தர்சபை இவ் வருமானத்தினை ஈட்டியதனை முன்னிட்டு 2023ஆம் ஆண்டில் மிகவும் சிறப்பான திட்டத்துடன் தமது நடவடிக்கைகளை செயற்படுத்தியதுடன் அதனடிப்படையில் மேற்கூறப்பட்டவாறு வாடிக்கையாளர்களுக்கு பரிசுகளை அதிக அதிகமாக வழங்கும் வகையில் லொத்தர்களை அறிமுகப்படுத்தியும் புதிய விரிவாக்கல் மூலோபாயங்கள் மூலம் அவர்களின் விற்பனை இலக்குகளை அடைய ஒத்துழைப்பு வழங்கியமையூடாக விற்பனையின் அதிகரிப்பினை அடைய முடிந்துள்ளது.

மேலும், அபிவிருத்தி லொத்தர்சபை மூலம் லொத்தர் விற்பனை முகவர்களுக்காக வெவ்வேறு ஊக்குவிப்பு வெகுமதித் திட்டங்கள் அறிமுகப்படுத்தியதன் மூலம், அவர்களை ஊக்குவிப்பதற்காக நாடளாவிய ரீதியில் "சங்வர்தன அபிமன்" எனும் பெயரில் விற்பனை முகவர் சந்திப்புகளை நடாத்தி, அவர்களின் விற்பனையினை மேலும் அதிகரித்துக்கொள்வதற்கு அவர்களுக்கு விற்பனை குடில்கள் வழங்கல், குடில்களை அழகுபடுத்தல் மற்றும் நிரந்தர விற்பனை நிலையங்களை ஸ்தாபித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக அபிவிருத்தி லொத்தர்சபையின் தலைவர்/பிரதம நிறைவேற்று அதிகாரி அஜித் குணரத்ன நாரகல அவர்கள் அறிவித்திருந்தார்.

1983ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 41 ஆண்டு காலம் பெரு விருட்சமாக வளர்ந்துள்ள அபிவிருத்தி லொத்தர்சபை தற்போது நாட்டிற்கு தமது அயரா பங்களிப்பினை வழங்குவது இந் நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு அதிர்ஷ்டத்தினை ஈட்டித்தருவதன் மூலமாகும்.

அளவில்லா வெற்றியாளர்களை உருவாக்கி இவ்வாறான சாதனைபடைத்த இலாபத்தினை ஈட்டிய அபிவிருத்தி லொத்தர்சபை அடைந்த வெற்றியாவதோடு, அதற்கமைய 2024ஆம் ஆண்டில் புதிய விற்பனை மூலோபாயங்களை பயன்படுத்தி 2023ஆம் ஆண்டுக்கு அதிகமான முன்னேற்றத்தினை எதிர்பார்த்து அனைத்து நடவடிக்கைகளையும் திட்டமிட்டுள்ளதாக அதன் தலைவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
19 . 12 . 1938



உதிர்வு
04 . 04 . 2024

## திருமதி மகேஸ்வரி நமசிவாயம்

நுணாவில் மத்தி சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி நவசிவாயம் அவர்கள் கடந்த (04.04.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கண்மணி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பசுபதி தம்பதியரின் அன்பு மருமகளும், பத்மநாதன், காலஞ்சென்ற கமலநாதன், ஜெகநாதன், ஜெகதாம்பிகை, யோகநாதன், புவீந்திரன், சசீந்திரன், நவீந்திரன், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், மீரா, ஜெயந்தி, ஜெயரஞ்சன், சந்திரவதனி, மஞ்சுளா, றதிகா, குமாரலிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காயத்திரி, லக்மிகா, ஜெனுஷன், அரிஷன், யானுகா, ஸ்ரேகா, பரணிகா,சுதனிகா, அதீனா, டிலக்ஷன், துஸ்யந்தினி - விதுஜன், டிஷாந்தன், துவாரகா பிரசாந் ஆகியோரின் செல்லப் பேர்த்தியும், அதீதியின் செல்லப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**நுணாவில் மத்தி,**
**கண்டி வீதி, சாவகச்சேரி.**
**தொலைபேசி:076 4003 796**
**077 3916 676**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CR 42167) A-1

# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு
13.01.1956



உதிர்வு
09.03.2024

கடந்த 09.03.2024 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த
எமது குடும்பத்தலைவர்

## அமரர் தம்பித்துரை சத்தியதேவன் (வீரசிங்கம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று 06.04.2024 சனிக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (08.04.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**ஞானவைரவர் வீதி,**
**கோண்டாவில் கிழக்கு.**
**076 479 3107**

**குடும்பத்தினர்.**

(CS 00143) S-1

# மரண அறிவித்தல்



தோற்றம்
11.05.1935

மறைவு
03.04.2024

## விசயரத்தினம் திலகவதி

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட விசயரத்தினம் திலகவதி அவர்கள் கடந்த (03.04.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சரஸ்வதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னட்டியார் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான நகுலாம்பிகை, திருநாவுக்கரசு, இராஜகோபால், மங்கையர்க்கரசி, சாம்பசிவம் மற்றும் பூலோகவதி, மணிமேகலை, தெய்வேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலேஸ்வரி, சர்வலோகநாயகி (பிரான்ஸ்), தயாபரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற அம்சமாலனமூர்த்தி (வவா) மற்றும் சிவமலர் (ஜேர்மனி) சாரதாதேவி, சிவமூர்த்தி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான ராமசாமி, சிவகுமரன் மற்றும் ஜெகதீஸ்வரி (ஜேர்மனி), சத்யதேவி, சிவபாலன் (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஸ்ரீகரன் - மதிவதனி (லண்டன்), சசிந்தா - கணநாதன் (லண்டன்), சசிகரன் (நிசாந்தன்) - பிரியா, கஜீகரன், யசிந்தா - சுதர்சன், சிவந்தா - சுரேந்திரா (ஹொலண்ட்), சிவந்தன் - சியாமளா (பிரான்ஸ்), காலஞ்சென்ற சகிந்தன் மற்றும் தஜீபன் - சுவேதா (ஜேர்மனி), திவ்யா (ஜேர்மனி), தனுசன் (ஜேர்மனி), அபிரா - ரகுநாதன், அனுசன், அனோஜன், அனுஜா, தரன்யா (ஜேர்மன்), யசீகா (ஜேர்மன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சஜனிகா (லண்டன்), கபிசன் (லண்டன்), லக்சிதா (லண்டன்) - அபினா (லண்டன்), சுஜான் - சுஜன்சன் - கிரிசாந் (ஹொலண்ட்), திசாந்த், ரியான், தனுஷியா, சதுர்சினி, மதுனா, சிவசதுசன் - சிவகார்த்திகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2024) ஞாயிற்றுக்கிழமை சுதுமலை தெற்கு மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுதுமலை தெற்கு,**
**மானிப்பாய்.**

(CS 28505) S-1

தகவல்:
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கோலியின் சதம் வீண்

# பெங்களூரை வீழ்த்தி ராஜஸ்தான் பேரெழுச்சி

சென்னை, ஏப். 7

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் பட்லரின் சதத்தின் உதவியுடன் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸைத் தோற்கடித்து அபாரமான வெற்றிபெற்றது ராஜஸ்தான்.




முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி 3 விக்கெட்டுகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. கோலி ஆட்டமிழக்காமல் 113 ஓட்டங்களைப் பெற்றார். கோலி சதம் கடந்தாலும் அவர் இந்த ஓட்டங்களுக்காக 72 பந்துகளை எதிர்கொண்டார். 10 முதல் 15 பந்துகள் வரை குறைவாக எடுத்துக்கொண்டு இந்த ஓட்டத்தை அவர் பெற்றிருக்கவேண்டும். அல்லது அவர் 130 ஓட்டங்களையாவது சேர்த்திருக்கவேண்டும். அதிலும் முதலாவது ஓவர் முதல் இறுதி ஓவர் வரையில் களத்தில் நின்ற வீரர் என்ற அடிப்படையில் கோலி இன்னும் கொஞ்சம் அடித்தாடியிருக்கவேண்டும் என்பதே பலரின் நிலைப்பாடாகவும் இருந்தது.

பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் அணி ஓட்டமெதையும் பெறாத நிலையில் ஆரம்ப வீரர் ஜெய்ஸ்வாலை இழந்தது. எனினும் பட்லர் மற்றும் அணித்தலைவர் சாம்சன் இருவரும் அற்புதமாக விளையாடி ராஜஸ்தானைப் பலப்படுத்தினார்கள். 42 பந்துகளில் 69 ஓட்டங்களைப் பெற்று சாம்சன் ஆட்டமிழந்தாலும் தொடர்ந்தும் அதிரடியாக விளையாடின பட்லர் 58 பந்துகளில் சதத்தைக் கடந்து வெற்றிக்கு வித்திட்டார். (ம)

# நேரடியாகத் தாக்கமுடியாதோர் சூழ்ச்சிகளால் தாக்குகின்றனர்!

### சிறீதரன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 7

என்னை நேரடியாகத் தாக்க முடியாதவர்கள், வேறு சிலரைக் கொண்டு தாக்க முற்படுகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவானவருமான சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களின் உரிமைக்கான பாதையை நோக்கிச் செல்லும் தமிழரசுக்கட்சியை சிலர் தங்களின் சுயலாப அரசியலுக்காகச் சிதைக்க முற்படுவது கவலையளிக்கிறது. கட்சி விடயத்தில் சுயநலத்துடன் சேர்ந்து சூழ்ச்சிகரமான சில செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

என்னை நேரடியாகத் தாக்காதுவிட்டாலும் வேறு சிலரைக்கொண்டு தாக்க முற்படுகின்றனர் என்று சிறீதரன் மேலும் தெரிவித்தார். (ம-113)

**வரவேற்பாளர் தேவை (Receptionist)**

யாழில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்திற்கு இரவு நேர வரவேற்பாளர் தேவை.

**வேலை நேரம் : மாலை 05 மணி முதல் இரவு 12 மணி வரை.**

பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: **070 356 7811**

**வேலை வாய்ப்பு**

யாழ் நகரில் உள்ள மிகப்பெரிய **கவரிங் நகைகள் காட்சியறைக்கு விற்பனையாளர்கள், உதவியாளர்கள் தேவை.**

**077 351 5980, 077 563 2734**

(CS/54647) J-1

**காணி விற்பனைக்கு**

நீர்வேலி, பருத்தித்துறை பிரதான வீதியில் இருந்து நான்காவது காணியாக உள்ள 2 3/4 பரப்புக் காணி 3 பக்க மதிலுடன், வெட்டுக்கிணறு மின்சார வசதி நல்ல அயற்சூழலில் விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு: **077 064 4752**

**பிறவுண் வீதியில் காணி விற்பனைக்கு**

நாவலர் வீதிச் சந்திக்கும் நீராவியடி பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் பிறவுண் வீதியில் இரண்டாம் காணியாக இரண்டு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. மாலை 5.00 மணிக்கு பின்பு பார்வையிடலாம்.

தொடர்பு: **077 657 7623**

# மரண அறிவித்தல்

**"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (யோவான் 11:25)**



**மண்ணில் 08.05.1942**

**மகிமையில் 04.04.2024**

## திருமதி வேதநாயகம் யேசுராணி

வயாவிளானை பிறப்பிடமாகவும் இல.35, மாட்டீன் லேன், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேதநாயகம் யேசுராணி அவர்கள் கடந்த (04.04.2024) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மிக்கேல் உடையார் - பூரணம் தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - ஜோதி நட்சத்திரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை வேதநாயகம் அவர்களின் பாசமிகு மனைவியும். மகாராணி, கமலராணி (கொலன்ட்), ரவீந்திரகுமார், பரிமளராணி (நோர்வே), சுரேந்திரகுமார், மகாராஜா (போதகர், சீயோன் தேவாலயம் - யாழ்ப்பாணம்), சுதாஜினி (UK), ஜெறோம் மதிவதனன் (UK), சுமணன் (போதகர் - சீலோவாம் தேவாலயம் - நாவற்குழி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பரதன், மஞ்சுளா, சிறீதரன், கொலஸ்ரீனா, மேரியா, பாலச்சந்திரன், கார்த்திகா மற்றும் ஷோபிதா ஆகியோரின் அன்புமிகு மாமியும், Dr. கஜரூபன்- சுரேக்கா, தர்ஷனா-காந்தரூபன், நயோமி, ஈத்தேஸ், ஈனோக் வட்சன், பிறைனர், மிஷேல், பென்ஹனன், ஷமீரா, கெவின், கெஷான், ஸ்மித், ஸ்ரெபான், ஷேன், எவன்ஸ், எடின், டெபி, டெமி, டிஷா, ஒபேட் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், எல்ஷனன், எலன் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இல.35, மாட்டீன் லேனிலுள்ள அவருடைய இல்லத்தில் நாளை (08.04.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, தாவடியிலுள்ள கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சபை விசுவாசிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**இல.35, மாட்டீன் லேன், யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 142) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல் உடைக்கும் ஆலை (கிறசர்) விற்பனைக்கு

- வவுனியாவில் கல் உடைக்கும் ஆலை விற்பனைக்கு உள்ளது.
- மிகக் குறுகிய காலம் பாவித்த நல்ல நிலையில் உள்ள 250X400 கிறசர் விற்பனைக்கு.

தொடர்பு:- 077 077 7422

## பெண் வேலையாள் தேவை

**யாழ் நகரில் உள்ள வீட்டிற்கு வீட்டு வேலைகளை செய்வதற்கு பெண் வேலையாள் தேவை.**
45 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 977 0451

(CS/54636) J-1

## மணமகன் தேவை

யாழ். இந்து, 1996, மிருகசீரிடம், 4 ம் பாதம் மிதுனராசி வங்கியியல் பட்டதாரியான இலங்கை வங்கியில் நிரந்தர பணிபுரியும் மணமகளுக்கு, இந்து மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

076 172 0486

(CS/54626) N-1

## வீடு வளவு விற்பனைக்கு

**யாழ். உரும்பிராய் தெற்கு,** கோப்பாய் வீதியில் நீதவான் ஒழுங்கையில் அமைந்துள்ள **ஏழு பரப்புக் காணியுடன் கூடிய** நல்ல நிலையிலுள்ள **வீடு வளவு விற்பனைக்கு உண்டு.** தரகர் தேவை இல்லை.

077 355 2989, 071 327 6969

(CS/54644) J-1

## வீடு வாடகைக்கு

42, பொன்னையா வீதி, கொக்குவில் மேற்கில் வீடு வாடகைக்கு உண்டு.

077 265 8065

(CS/54555) J-1

## உடனடி விற்பனைக்கு

**பாவித்த நல்ல நிலையிலுள்ள வீட்டு உபகரணங்கள் உடனடி விற்பனைக்கு.**
( கட்டில், மேசை, Dressing Table, Dress Hanger Wooden Stand, குளிர்சாதனப் பெட்டி, Oven, 43" LED THOSHIBA TV, 16 L Sprayer) மற்றும் FZ - 5 மோட்டார் சைக்கிளும், பொக்கற் டோக் இன பெண் நாய்க் குட்டியும் விற்பனைக்கு உண்டு.

077 400 2382, 076 830 7424

(CS/00155) J-1

## வீட்டுக் காணி விற்பனைக்கு

சங்கானை வீதி அச்சுவேலி (ஒட்டகப்புலம் மக்கோனா சீர்திருத்தப் பள்ளி அருகில்)
**30 பரப்பு வீட்டுக் காணி விற்பனைக்கு உண்டு.**

0044 772 715 3689
0044 730 634 4296

(CS/00122A) J-1

## பெண் வேலை ஆட்கள் தேவை

**மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண் வேலை ஆட்கள் தேவை.**
**வயது எல்லை** :- 18 தொடக்கம் 30 வரை
**வேலை நேரம்** :- காலை 8.00 தொடக்கம் 5.30 மணி வரை
மாதவேதனமாக :- ரூபா 22000/= தொடக்கம் ரூபா 30000/= வரை வழங்கப்படும்.

077 728 5768

(CS/54651) J-1

## காணி விற்பனைக்கு

எழுதுமட்டுவாழ் வடக்கு, மருதங்குளம் விழுமிளை யில் வடக்கு நோக்கி 1/2 கி.மீ தூரம் நிலப்பரப்பு - 65 தென்னை, தோட்டப் பயிர்செய்கைக்கு உகந்த நிலம். தரகர் தேவை இல்லை.

077 691 4151, 021 227 0948

(CS/54657) J-1

## கற்பிக்கப்படும்

**அனுபவமிக்க ஆசிரியரினால்**
**8 - 11 வரையான வகுப்புகளுக்கு**
**Cambridge / Sri lankan**
பாடத்திட்டங்களுக்குரிய
**Maths and Physics** கற்பிக்கப்படும்.

தொடர்பு:- 077 340 5973

(CS/54633) J-1

## வீடு வாடகைக்கு உண்டு

சகல வசதிகளும் கொண்ட 3B/R வீடு 1ம் மாடியில் Garage உடன் யாழ் பல்கலைக் கழகத்திற்கு அருகாமையில் குமாரசாமி வீதியில் சிறிய குடும்பத்திற்கு வாடகைக்கு உண்டு.

1-647-822-0973, 077 827 3507

(CS/54822) J-1

## வேலையாட்கள் தேவை

எமது தளபாட நிலையத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் உடன் தேவை. நிரந்தரமான வேலையும், தங்குமிட வசதியும் உண்டு.

1. தளபாட பெயின்ரர் - 65000/= மேல்
2. கூலி வேலையாட்கள் - 50000/= மேல்
3. வேலை பழக விரும்புபவர்கள் - 30000/= மேல்

**ஆர்க் தளபாட நிலையம்**
**இல.35, கொட்டைக்காடு ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு,**
**(பஸ் டிப்போ அருகாமை)**
**T.P: 021 221 9909**

CS 00137 (3x5) A-1

## காணி விற்பனைக்கு


மந்துவில், வரணி - வேம்பிராய் வீதியில் அமைந்துள்ள நிலப்பரப்பு 100 அளவுடைய காணி விற்பனைக்குள்ளது. காணி A9 Road இலிருந்து 5 நிமிடம் Drive தூரத்திலும், பருத்தித்துறை - கொடிகாமம் வீதியிலிருந்து 4 நிமிடம் Drive தூரத்திலுள்ளது.

இந்தக் காணி வீடு, தோட்டம், தென்னைச் செய்கை, பண்ணை (Farm) இற்கு உகந்தது. உண்மையாக வாங்குவதற்கு ஆர்வம் உடைய வர்கள் தொடர்பு கொள்ளவும். விலை பேசித்தீர் மானிக்கப்படும்.

(CS/28110) J-1

தொடர்புகளுக்கு : சிறி
074 154 6148, 077 272 0595
மின்னஞ்சல் : abikumar65@gmail.com

## காணி விற்பனைக்கு




**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு அண்மையாக பலாலி வீதியிலிருந்து 150m தூரத்தில் வீட்டுடன் கூடிய 5 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

- மொத்தமாகவும் அல்லது பிரித்தும் கொடுக்கப்படும்.
- விலை நேரில பேசித்தீர்மானிக்கப்படும்.

- யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் 450m
- நொதேண் வைத்தியசாலை 350m
- நல்லூர் கோவில் 1200m

தொடர்புகளுக்கு :
உரிமையாளர் :
075 776 7777 / 076 625 5277

## Jaffna College - Vaddukoddai
### Vacancy – Hostel Sub wardens Male and Female

Jaffna College is a prestigious and long standing private school in Vaddukoddai, Sri Lanka. The school is looking for a passionate, dynamic, inspirational and hard-working individual for the above positions.

Requirements
- The ability to liaise with parents/guardians on a need basis.
- The skills to enforce discipline and a code of conduct as per school policies and regulations.

Accommodation and food provided.
Closing date for applications 14.04.2024

Applications with the names of two non-related referees should be sent to hr@jaffnacollege.lk

Only short listed candidates will be called for an interview.

Principal

## Vacancy

**யாழ்நகரில் இயங்கும் பிரபல தனியார் கணினி நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.**

- Showroom Manager
- Showroom Sales person (Male, Female)
- Cashier (Male, Female)
- Computer Hardware Technician
- CCTV Technician

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்
ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் **14.04.2024** க்கு முன்னர் உங்கள் சுயவிபரக்கோவையை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இலக்கம் : J / 1002
மே / பா உதயன் பனிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(CS) 54645 (N) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 05 . 1959



மறைவு
01 . 04 . 2024

குகராசா மனோகரதேவி

கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட குகராசா மனோகரதேவி அவர்கள் கடந்த (01.04.2024) திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் கந்தையா குகராசாவின் (தலைவர், மணியர்பதி ஶ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற கைலாசபிள்ளை - கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா - செல்லம் தம்பதியரின் மருமகளும், கருணாகரன், மனோகரன், கருணாதேவி, வசீகரன், லாலாகரன், கௌசலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவராசா, ஜெயமாலா, சோபனா, செல்வமலர், பாலச்சந்திரன் மற்றும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம், மகாலட்சுமி, தியாகலிங்கம், ஜெயசீலன், அனாமரியா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**க.குகராசா (021 222 0701, 077 881 8862)**
**கை.வசீகரன் (077 617 1519)**

(CS/00125) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.04. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஓடித் திரியும் கருத்து –அதை
ஓடாமல் கூட்டிப் பிடித்துத் திருத்து
நாடிக் கொண்டம்பைப் பொருத்து – அந்த
நாதாந்த வெட்டவெளிக் குள்இருத்து.

-கஞ்சமலைச் சித்தர்

பக்கங்கள்: 08

சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2055 பங்குனி 25 ஞாயிற்றுக்கிழமை (07.04.2024)






# லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கு!

○ கே.வி.தவராசா

சந்திரிகா பண்டார நாயக்க ஜனாதிபதியான பின்னர் வெளிவிவகார அமைச்சராக இருந்து அரசின் சார்பில் இந்நாட்டின் வெளியுறவுக் கொள்கையில் குறிப்பிடத்தக்க அடைவுகளைக் கண்டவர் லக்ஷ்மன் கதிர்காமர். அவரது வெளியுறவுச் செயற்பாடுகளின் விளைவாகவே பல நாடுகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்தன. இடையறாது தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருந்த அமைச்சர் கதிர்காமர் கொழும்பின் மத்திய பகுதியில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் புல்லர்ஸ் ஒழுங்கையில் உள்ள அவரது வீட்டில் நீச்சல் தடாகத்தில் நீந்திக் கொண்டிருந்த சமயத்தில், 2005 ஓகஸ்ட் 12ஆம் திகதி இரவு சுமார் 10.45 மணிக்கு சுட்டுக் கொல்லப்பட்டார். வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டுக் கொல்லப்பட்டதனையடுத்து, மறுதினமான 2005ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி அவசரகாலச் சட்டம் மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

நீச்சல் தடாகத்திலிருந்து 35 மீற்றர் தொலைவிலிருந்த பக்கத்து வீட்டின் மேல்மாடியிலிருந்த ஒரு குளியலறையிலிருந்து துப்பாக்கிச் சூடுகள் வந்ததாக பொலிஸார் கூறினர். அலுமினிய பைப்களைக் கொண்டு செய்யப்பட்ட ஒரு கமரா தாங்கியின் மீது கொலையாளி துப்பாக்கி ஒன்றைப் பொருத்தி குளியலறை ஜன்னலிலிருந்த சிறு துவாரத்தினூடாகவே சுட்டுள்ளார்.

### குற்றப்பத்திரம்


இந்த வழக்கின் குற்றப்பத்திரத்தில் முறையே புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டம்மான் என அழைக்கப்படும் சிவசங்கர் மற்றும் சார்ள்ஸ் மாஸ்டர், கோமதி மணிமேகலை, முத்தையா சகாதேவன் பாபு என அழைக்கப்படும் ஆரோக்கியநாதன் ஆகியோர் எதிரிகளாகக் குறிப்பிடப்பட்டனர் இந்த வழக்கில் தடயப் பொருள்களாக இயந்திரத்துப்பாக்கி, துப்பாக்கி ரவைகள், சினைப்பர் வகையான துப்பாக்கி என்பனவும், 28 சாட்சிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 31(1) பிரிவின் கீழ் பொருள் கோடல் செய்யப்பட்டுள்ளவாறு 'குறித்துரைக்கப்பட்ட ஆளொருவரான இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நாடாளுமன்ற உறுப்பினரும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பதவியில் ஈடுபட்டவருமான லக்ஷ்மன் கதிர்காமர் என்பவரது மரணத்தை விளைவிப்பதற்காக , பொது நோக்குடன் உடந்தையாக அல்லது ஒன்று சேர்ந்து சதி செய்து தவறைப் புரிந்துள்ளதாகவும் குறித்த சதியின் பிரதிபலனாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 3(ஆ) பிரிவுகளின் பிரகாரம் லக்ஷ்மன் கதிர்காமர் என்பவருக்கு மரணத்தை விளை வித்ததாகவும்' ஏழு குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் தண்டனை விதிக்கக் கூடிய குற்றத்தை புரிந்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டு கொழும்பு மேல் நீதிமன்றில் 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.




### புதிய குற்றச்சாட்டுப்பத்திரம்

வேலுப்பிள்ளை பிரபாகரன், பொட்டம்மான், சார்ள்ஸ் மாஸ்டர், மணிமேகலை, முத்தையா சகாதேவன் ஆகிய முதல் நான்கு எதிரிகளும் 2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மரணமடைந்து விட்டனர் என நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு குறிப்பிட்ட முதல் நான்கு எதிரிகளையும் குற்றச் சாட்டுப்பத்திரத்திலிருந்து நீக்கி விட்டு முத்தையா சகாதேவன், இசிதோர் ஆரோக்கிய நாதன் ஆகியோர் முதலாவது இரண்டாவது எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்டு அவர்களுக்கெதிரான புதிய குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கில் 1 ஆம் எதிரியான முத்தையா சகாதேவனது சார்பில் சட்டத்தரணி அப்பாப்பிள்ளை விநாயகமூர்த்தி ஆஜராகி வாதிட்டபோதிலும் முத்தையா சகாதேவன் பொலிஸாருக்கு வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலம், விசாரணையின் பின்னர் நீதிமன்றினால் அரச சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இதனையடுத்து வழக்கின் மேலதிக விசாரணை நடைபெறுகையில் அவர்து சட்டத்தரணி விநாயகமூர்த்தி காலமானார். 13 வருடங்களாக சிறையில் விடுதலைக்காக காத்திருந்த முத்தையா சகாதேவன், நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுச் சிறுநீரக நோயினால் சிறையிலேயே மரணமடைந்தார். ஆரோக்கியநாதனுக்காக நான் தொடர்ந்தும் வாதாடினேன். இறுதியில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.



### கொலையும் விடையில்லா வினாக்களும்

கதிர்காமரின் பாதுகாப்புப் பிரிவுத் தலைவரான கப்டன் மனதுங்க 'நீச்சல் தடாகத்தைச் சுற்றிலும் வீட்டிலும் ஐந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருந்தனர் என்று நீதிவான் நீதிமன்ற விசாரணையில் சாட்சியமளித்துள்ளார். அந்தத்துப்பாக்கிச் சூடு தனக்குக் கேட்டதாகவும் தான் திருப்பிச்சுட்டதாகவும் அதன் பின்னர் ஏனைய பாதுகாப்பு உத்தியோகத்தர்களோடு அமைச்சரை தேசிய மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றதாகவும்' கூறினார்.

### தன்னியக்க ஆயுதம்

கொலையாளி சினைப்பர் ரைபிள் ஒன்றைப் பயன்படுத்தியிருந்தார் எனப் பொலிஸார் முதலில் கூறினர். எனினும், அது அவ்வாறல்ல என்பதை அரச பகுப்பாய்வுத் திணைக்களம் உறுதிப்படுத்தியது. கதிர்காமர் ஒரு விசேட ரைபிளினால் கொல்லப்படவில்லை.

ஆனால், இலங்கை ஆயுதப் படைகளினால் பயன்படுத்தப்படும் வகையிலான ஒரு தன்னியக்க ஆயுதத்தினாலேயே கொல்லப்பட்டார் என்பதோடு, நாடு முழுவதும் அது தாராளமாகக் கிடைக்கக் கூடியதாகவும் இருந்தது.

அரசுக்குச் சொந்தமான 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகையில் வெளிவந்த ஒரு கட்டுரையில் 'கதிர்காமர் ஆயுதப்படையிடமிருந்து களவாடப்பட்ட அல்லது ஓர் ஆயுத வியாபாரியிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்துப்பாக்கி ஒன்றினால் கொல்லப்பட்டார்' என்று மிகவும் ஆச்சரியப்படும் வகையில் கூறியுள்ளது.

(மிகுதி அடுத்த வாரம்)

புதுமையும் [illegible] புல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழக முதல்வருக்கு அனுப்பிய கடிதம்

நிலாந்தன்

கடந்த 19ஆம் திகதி தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட ஒரு கூட்டுக்கடிதம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய உப தூதரகத்தில் கையளிக்கப்பட்டது. திருச்சி சிறப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த மூன்று அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு தமிழக முதல்வரிடம் அந்தக்கூட்டுக் கடிதம் கோரிக்கை விடுத்திருந்தது. திருச்சி சிறப்பு முகாமில் உள்ள ஈழத்தமிழர்களின் நலன்களைக் கவனிக்கும் ஒரு வழக்கறிஞரின் பங்களிப்போடு அந்தக்கூட்டுக் கடிதம் தயாரிக்கப்பட்டது. கடந்த 17 ஆம் திகதி உத்தியோகப்பற்றற்ற விதத்தில் தமிழக முதல்வரிடம் கையளிக்கப்பட்டது. பின்னர் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள உபதூதரகம் ஊடாக அனுப்பப்பட்டது. தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 12பேர் ஒன்றாக இணைந்து அப்படி ஒரு கடிதத்தை அனுப்பியமை முக்கியமான ஓர் அடைவு. உடல்நலக் குறைவு காரணமாக சம்பந்தர் கையெழுத்திடவில்லை.

2021ஆண்டும் ஒரு கூட்டுக்கடிதம் தயாரிக்கப்பட்டது. அந்த ஆண்டு நடக்கவிருந்த ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரை முன்னிட்டு அந்த ஆண்டு ஜனவரி மாதம் அந்தக்கடிதம் அனுப்பப்பட்டது. கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளின் பின் மீண்டும் 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து ஒரு கூட்டுக் கடிதத்தை தமிழக முதல்வருக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

அதிகம் கவனத்தை ஈர்க்காத அந்த முயற்சி மகத்தானது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் சிறப்பு முகாம் கைதிகளின் விடயத்தில் ஒன்றிணைந்த அதே கட்சிகள் ஏனைய எல்லா விடயங்களிலும் ஒன்றிணையும் என்று கற்பனை செய்யத் தேவையில்லை. தமிழரசுக் கட்சிக்குள் நடப்பவை முழுத் தமிழ் அரசியலுக்கும் பொருந்தும். தமிழ் மக்களுக்கு இப்பொழுது எதிரிகள் வெளியில் இல்லை. சொந்த வீட்டுக்குள்தான் இருக்கிறார்கள். ஒரு தேர்தல் ஆண்டில் தமிழ் மக்கள் ஒருமித்து முடிவெடுக்கமுடியாத ஒரு நிலை.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில், தமிழ் மக்கள் மத்தியில் மூன்று விதமான முடிவுகள் காணப்படுகின்றன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலைப் புறக்கணிக்கின்றது. ஆனால், அந்த முடிவை மக்கள் மயப்படுத்தவேண்டும் என்று அந்தக்கட்சி சிந்திக்கவில்லை. அதாவது தன்னுடைய முடிவு சரி என்று மக்களை ஏற்றுக் கொள்ளச் செய்து தேர்தலைப் புறக்கணிக்கும் ஒரு மக்கள் மக்கள் ஆணையைப் பெற அந்தக்கட்சி முயற்சிக்கவில்லை.

தமிழரசுக் கட்சி இரண்டாகி நிற்கிறது. ஒரு பிரிவு சஜித்தோடு நிற்பதாகத் தோன்றுகிறது. மற்றொரு பிரிவு தமிழ்ப் பொது வேட்பாளருக்குக் கிட்டவாக நிற்கிறது. குத்துவிளக்கு கூட்டணிக்குள், ஈ.பி.ஆர்.எல்.எப். தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முடிவை எப்பொழுதோ எடுத்துவிட்டது. ஏனைய கட்சிகள் அது தொடர்பாக தமது உத்தியோகபூர்வ நிலைப்பாடுகளை அறிவிக்கவில்லை. விக்னேஸ்வரன், பொது வேட்பாளரை ஏற்றுக்கொள்கிறார். இப்படியாகத் தமிழ்த் தரப்பில் மூன்று நிலைப்பாடுகள் உண்டு. ஆனால் அவை நிலைப்பாடுகள்தான். கருத்துருவாக்கம் என்ற செயற்பாட்டுக்கும் அப்பால் அதை நோக்கிய கட்டமைப்புகள் எவையும் இதுவரை உருவாக்கப்படவில்லை. அதாவது கிட்டத்தட்ட ஆறு மாதங்களில் வரக்கூடிய ஒரு தேர்தலை எதிர்கொள்வதற்கு தமிழ்த் தரப்பு இப்படித்தான் தயாராகக் காணப்படுகின்றது.

அதேசமயம் தென்னிலங்கையில் பிரதான கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலை நோக்கி திட்டமிட்டு உழைக்கின்றன. ஜே.வி.பி.தான் முதலில் உற்சாகமாக உழைக்க தொடங்கியது. 'அரகலய' வின் விளைவு அது. அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பஸில் அதிகரித்த எதிர்பார்ப்போடு உழைத்து வருகிறார். அமெரிக்காவிலிருந்து வந்த பஸில் தமது பேரபலத்தை அதிகரிக்கும் நோக்கத்தோடு கருத்துத் தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலை முதலில் வைப்பதற்குப் பதிலாக பொதுத் தேர்தலை முதலில் வைக்கவேண்டும் என்று அவர் கூறுகிறார். ஏனென்றால் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் மக்களுக்கு முற்கற்பிதங்களை ஏற்படுத்தும். முன் முடிவுகளை உருவாக்கும். ஒரு வெற்றி அலையானது தொடர்ந்து அடுத்தடுத்த தேர்தல்களிலும் எதிரொலிக்கும். எனவே ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் பொதுத் தேர்தலிலும் மக்கள் வாக்களிக்கக்கூடும். ஒரு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவாராக இருந்தால், அவர் பொருளாதாரத்தை மறுசீரமைப்பதற்காக கிடைத்த வெற்றியாக அது காட்டப்படும். அதனால் ரணிலின் பேரபலம் அதிகரிக்கும். அதன்பின் நடக்கக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலில் தாமரை மொட்டுக் கட்சி, ரணிலோடு பேரம் பேசி வேண்டிய அமைச்சுகளைப் பெறுவது கடினமாகலாம். எனவேதான் முதலில் ஒரு பொதுத் தேர்தலை வைக்க வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள்.



ஒரு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் வெற்றி பெறுவாராக இருந்தால் அது அவருடைய சொந்தக் கட்சியின் வாக்கு வங்கியால் அல்ல என்பது அவருக்கே தெரியும். தாமரை மொட்டுகளின் பலமின்றி வெற்றிபெற முடியாது என்ற நிலைதான் இப்பொழுதுவரை உண்டு. அவருடைய சொந்தக் கட்சியின் பலம் அவருக்கு குறைவு. எனவே அவருடைய சொந்தப் பலம் எது என்பதனை அவருக்கு உணர்த்தும் விதத்தில் ஒரு பொதுத்தேர்தலை முதலில் வைத்தால் அதில் ரணில் தன்னுடைய சொந்தப் பலம் எது என்பதைக் கண்டுபிடித்து விடுவார். அப்பொழுது அவருடைய பேரம் குறைவாக இருக்கும். அந்த நேரத்தில் ராஜபக்சக்கள் அவருடன் பேரம் பேசுவது இலகுவாக இருக்கும். நாமலை பிரதமராக நியமிக்கும்படி கேட்கலாம். எனவே முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடந்தால் அதில் ரணிலுக்குப் பேரபலம் அதிகரிக்கும். முதலில் நாடாளுமன்றத் தேர்தல் நடந்தால் அதில் ரணிலின் பேரம் குறையும். எனவே ரணிலின் பேரத்தைக் குறைப்பதுதான் ராஜபக்சக்களின் திட்டம். இதை இன்னும் ஆழமாகச் சொன்னால் அடுத்த நாடாளுமன்றத்தையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதுதான் அவர்களுடைய திட்டம்.

முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடந்தால் அதில் ரணிலுக்குப் பேரபலம் அதிகரிக்கும். முதலில் நாடாளுமன்றத் தேர்தல் நடந்தால் அதில் ரணிலின் பேரம் குறையும். எனவே ரணிலின் பேரத்தைக் குறைப்பதுதான் ராஜபக்சகளின் திட்டம். இதை இன்னும் ஆழமாகச் சொன்னால் அடுத்த நாடாளுமன்றத்தையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதுதான் அவர்களுடைய திட்டம்.

எனவே ராஜபக்சக்கள் தங்களுடைய பேரபலத்தை நிரூபிப்பதற்குத் தயாராகி வருகிறார்கள் என்று பொருள். இதை அதன் சாராம்சத்தில் சொன்னால், ராஜபக்சக்கள் தற்காப்பு நிலையில் இருந்து வலிந்து தாக்கும் நிலையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்று பொருள். கடந்த 2021ஆம் ஆண்டு 'அரகலய'வின் போது அவர்கள் பின்வாங்கும் நிலையில் இருந்தார்கள். சொந்தத் தேர்தல் தொகுதிகளிலேயே அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்கவில்லை. படைமுகாம்களில் அவர்கள் அடைக்கலம் தேட வேண்டி வந்தது. ஜனாதிபதியாக இருந்த கோத்தாபய வெளிநாடு ஒன்றுக்குத் தப்ப வேண்டி வந்தது. ஆனால் அவ்வாறான தற்காப்பு நிலையில் இருந்து இப்பொழுது வலிந்து தாக்கும் ஒரு நிலையைத் தாங்கள் அடைந்துவிட்டதாக அவர்கள் நம்புகிறார்கள். எனவே அதை நோக்கித்தான் அவர்கள் திட்டமிடுகிறார்கள். கோத்தாபயவின் புத்தகமும் அந்த அடிப்படையில் எழுதப்பட்டதுதான்.

ஆனால் அமெரிக்காவிலிருந்து வந்த பஸில் நினைத்தபடியெல்லாம் அரசியலை நகர்த்தமுடியாது என்பதைத்தான் அண்மையில் அமெரிக்காவுக்குச் சென்று வந்த மைத்திரியின் சர்ச்சைக்குரிய கூற்று வெளிப்படுத்துகின்றதா? மைத்திரி கூறுகிறார், ஈஸ்டர் குண்டு வெடிப்புத் தொடர்பாக தனக்கு ரகசியங்கள் தெரியும் என்று. அவர் ஏன் அவ்வாறு கூறுகிறார் ? அதுவும் ஒரு ஜனாதிபதித் தேர்தல் வர இருக்கும் பின்னணியில் ஏன் அப்படிக் கூறுகிறார்? ஏனென்றால், ஈஸ்டர் குண்டு வெடிப்பைப்பற்றிப் பேசினால் அதன் விளைவுகள் ராஜபக்சக்களைத்தான் பாதிக்கும்.

ராஜபக்சக்கள் தற்காப்பு நிலையில் இருந்து வலிந்து தாக்கும் நிலைக்கு முன்னேறுவதை, மேற்கு நாடுகள் விரும்பவில்லையா? அப்படிப் பார்த்தால், மைத்திரி கிளப்பிய சர்ச்சையும் 'சனல் - 4' வீடியோவைப் போன்றதுதானா? இதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், ராஜபக்சக்களை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்குச் சவாலாக எழாதபடி பார்த்துக் கொள்வதுதான் மேற்கு நாடுகளின் திட்டமா ? அதாவது ரணிலுடைய வழிகளை இலகுவாக்கிக் கொடுத்தல்?

மேற்கு நாடுகளும் மேற்கத்திய பெரு நிறுவனங்களாகிய சர்வதேச நாணயநிதியம் போன்றனவும் ரணில் பதவியில் தொடர்ந்துமிருப்பதைத்தான் விரும்புவதாகத் தெரிகிறது. மேற்கத்தைய பாரம்பரியத்தில் வந்த அவரைக் கையாள்வது இலகுவானது என்று அவை நம்புகின்றன. கத்தியின்றி ரத்தமின்றி, தேர்தலின்றிக் கிடைத்த ஆட்சிமாற்றத்தை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கும் தொடர விரும்புகின்றன.

(08 ஆம் பக்கம் பார்க்க )




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளியிலே தெரிவது ஓவியமா?









இந்தியா கனடா போன்ற ஏனைய நாடுகளுடன் இக்கலை ஒப்பிடும் பொழுது இதற்கான வருமானம் இலங்கையில் குறைவாகத்தான் உள்ளது. ஆனால் இதுக்கான வரவேற்பு தற்போது அதிகரித்து காணப்படுகிறது. இது ஒரு புதுவிதமான கலை. இந்தியாவில் அநேகர் இக்கலையை மேற்கொள்கிறார்கள்.



நேர்கண்டவர்
துவர்னிஜா சதீஷ்குமார்
ஊடக கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தமிழர்களுடன் இரண்டறக் கலந்துவிட்ட கலைகளில் ஒன்று ஓவியக்கலை. சங்க காலம் தொட்டே இன்று வரை நம்மோடு பயணித்து வரும் ஓவியக் கலை தன் பயணப்பாட்டில் கண்டுகொண்ட வளர்ச்சி அபரிமிதமானது. பாறைகளில் வரையத் தொடங்கிய ஆதிமனிதன் இன்று திறன் பேசிகளில் வரையும் அளவுக்கு ஓவியக்கலை புதிய பரிமாணம் அடைந்து வருகிறது. வண்ணத் தூரிகைகள் விளையாடிக் கொண்டிருக்கும் ஓவியக் கலையில் புதியதாக தற்போது சேர்ந்துள்ளது சூரிய ஒளியைப் பயன்படுத்தி வரையப்படும் ஓவியங்கள்.

யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த ஜெயராஜசிங்கன் பிரதிசன் என்பவர் ஒரு குவிப்புக் கண்ணாடியில் சூரிய ஒளியை குவித்து அதிலிருந்து வெளிப்படும் வெப்பத்தைக் கொண்டு மரப்பலகையில் ஓவியம் வரைகிறார். ஓவியத்தின் மீதான அவரது ஈடுபாடு அவரை இவ்வாறான புதிய படைப்புகளை உருவாக்கும்படி உந்தித் தள்ளியிருக்கின்றது. சூரிய ஒளியைக் குவித்து ஓவியம் வரையும் நுட்பங்கள் ஐரோப்பாவில் பிரசித்தி பெற்றிருந்தாலும் ஆசியாக் கண்டத்தில் அந்தக் கலை சிலராலேயே பின்பற்றப்படுகின்றன. ஆதலால், இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணம் பருத்தித்துறையிலிருந்து ஒரு தமிழ் இளைஞன் மேற்கொண்டுள்ள இந்த முயற்சியை எத்தனை பாராட்டினாலும் அத்தனையும் தகும்.



### எவ்வாறு வரையப்படுகின்றது?

சூரிய ஒளியைக் குவித்து ஓவியங்கள் வரைவதற்கு முன்னர் அந்த ஓவியத்தின் மாதிரிப் படங்கள் பென்சிலால் வரையப்படுகின்றன. இதற்குப் பின்னரே குவிவாடியைப் பயன்படுத்தி ஓவியங்கள் வரையப்படுகின்றன. சூரிய வெப்பத்தைக் குவித்து மரப் பலகையை எரித்து வரும் போது எரிவடையும் கோடே ஓவியமாக அமைகின்றது. மிக நுணுக்கமும் கடல்போன்று பொறுமையுமுள்ள இந்தக் கைங்கரியத்தை ஆற்றுவதென்பது வார்த்தையால் அளந்தெழுதிவிடும் அவ்வளவு இலகுவான காரியமல்ல. இதனால்தான் இந்தக் கலையில் தனித்து மிளிர்கின்றார் ஓவியர் ஜெயராஜசிங்கன் பிரதிசன்.

உயர்தரத்தில் கலைப் பிரிவைத் தேர்ந்தெடுத்தேன். படித்த படிப்பிற்கு ஏற்ற வேலையோ சம்பளமோ கிடைக்கவில்லை. வேலை தேடினேன். அப்போது சொந்தமாக ஏதாவது செய்து முன்னேற தீவிரமாக ஆலோசனை செய்தேன். இதன்போதே ஓவியங்கள் வரைவதை தொழிலாக செய்வோம் என்ற எண்ணம் தோன்றியது. முதலில், பென்சில் ஓவியங்கள் வரைந்து விற்பனை செய்தேன். பென்சில் ஓவியங்கள், கோலங்கள் வரைதல், ஒயில் பெயிண்டிங், வோட்டர் பெயிண்டிங் வரைந்தேன். புதுமையான யுக்தியைப் பயன்படுத்தி வரையவேண்டும் என்ற எண்ணம் என்னுள் இருந்து கொண்டே இருந்தது. இதன் தொடர்ச்சியாகவே நான் சூரிய ஒளியைக் குவித்து ஓவியத்தை வரையும் முயற்சியில் ஈடுபட்டு அதில் வெற்றிபெற்றுள்ளேன். தற்போது நான் ஓவியக்கலை ஆசிரியராகவும் பணியாற்றி வருகிறேன் என்று ஓவியத் துறை தொடர்பான தன் பயணப்பாட்டை விளக்குகின்றார் ஓவியர் ஜெயராஜசிங்கன் பிரதிசன்.

### அழகான ஓவியங்களில் மறைந்திருக்கும் ஆபத்து

எமது கண்பார்வைக்குத் தெரியும் விடயங்கள் அல்லது எமது கவனக்குவிவைப் பெறும் விடயங்களுடன் பல நேரங்களில் நாங்கள் எங்களில் பார்வையை, சிந்தனையை மட்டுப்படுத்திவிடுகின்றோம். அவற்றின் பின்னாலுள்ள அர்ப்பணிப்புகளும், எதிர்கொள்ளும் ஆபத்துகளும் சொல்லி மாளாதவை. ஓவியர் ஜெயராஜசிங்கன் பிரதிசன் சூரிய வெளிச்சத்தைக் குவித்து வரையும் ஓவியங்களின் பின்னுள்ள ஆபத்தம்சங்களும் அவ்வாறேதான்.

எனக்கான வேலை இதுதான் என முடிவு செய்தபோது இதில் வரும் நல்லது, கெட்டது என அனைத்தையும் கடந்துதான் வரவேண்டும். ஆரம்பத்தில் சூரிய ஒளி ஓவியங்கள் வரையும் போது வெயில் பட்டு உடலில் தோல் எல்லாம் எரியும். சருமத்தில் ஏற்பட்ட எரிச்சலுக்கு மருந்து போட்டாலும், திரும்பவும் வெயிலில் நிற்கும் போது மீண்டும் சருமப் பாதிப்பு ஏற்படும். அதனால் கைகளுக்கு கையுறை பயன்படுத்த ஆரம்பித்தேன். ஆனால் அப்போதும் கை சூடாகும். அதைத் தடுக்க பல்வேறு கிறீம்களை பயன்படுத்திக் கொண்டேன்.


நான் வரையும் படம் சின்னதாக இருந்தாலே அதை சூரிய ஒளியில் வரைய குறைந்தபட்சம் மூன்று முதல் நான்கு மணி நேரம் ஆகும். இதுவே மேகமூட்டமாக இருக்கும் நாள்களில் ஒரு படம் வரைய ஒரு நாள் முழுவதும் கூட ஆகும். என்னதான் இவ்வளவு தற்காப்பு நடவடிக்கைகள் செய்தாலும் சில சமயம் வெயில் அதிகமாக இருக்கும் நேரங்களில் ஓவியம் வரைவது உச்ச சிரமமாக இருக்கும். அதிக நேரம் தொடர்ந்து வெயிலில் நிற்கும்போது உடலில் உள்ள நீர்ச்சத்து அனைத்தும் குறைய ஆரம்பிக்கும். அதைச் சமாளிக்க இடை இடையே தண்ணீர், ஜூஸ், இளநீர் போன்றவற்றை எடுத்துக்கொள்வேன். அப்போதுதான் வெயிலின் தாக்கத்தில் இருந்து ஓரளவு தப்பிக்கமுடியும் என்று தனது ஓவியங்களின் பின்னுள்ள உழைப்பைப் பதிவுசெய்கின்றார் அவர்.

### எகிறும் எதிர்பார்ப்பு

இந்தியா - கனடா போன்ற ஏனைய நாடுகளுடன் இக்கலையை ஒப்பிடும் பொழுது இதற்கான வருமானம் இலங்கையில் குறைவாகத்தான் உள்ளது. ஆனால் இதுக்கான வரவேற்பு தற்போது அதிகரித்து காணப்படுகிறது. இது ஒரு புதுவிதமான கலை. இந்தியாவில் அநேகர் இக்கலையை மேற்கொள்கிறார்கள். ஆனால், இலங்கையில் அனேக மக்களுக்கு இக்கலை புதிதாகவும் ஆச்சரியமாகவும் உள்ளது. எந்தக் கலையாக இருந்தாலும், 'மாற்றி யோசி' எனும் நுட்பமும் திட்டமுமே அந்தக் கலைகளையும் கலைஞனையும் வாழவைக்கும். அதற்கு ஓவியர் ஜெயராஜசிங்கன் பிரதிசன் ஓர் எடுத்துக்காட்டு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



**வி.கவிவருண்**
தரம் - 5
யா/ புற்றளை மகா. வித்தியாலயம்


**K.யனுஷன்**
தரம் - 7
G.T.M.S. பாடசாலை



## மாணவர்களே!

நீங்களும்
உங்கள் கைவண்ணங்கள்,
ஆக்கங்களை அனுப்பலாம்.


உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
Sanjeevi@uthayan.com



**அ.நிதுஷனா**
தரம் - 7 F
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை



**சு.மதுசாயினி**
தரம் - 10
வவு/ விபுலானந்தா கல்லூரி



**A.நிதுஷனா**
தரம் - 6
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை





**R.N.ஹெஷோனா**
தரம் - 8A
யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்

## முதல் பத்திரிகை

- இலங்கையின் அச்சு ஊடக வரலாற்றில் முதன் முதலாக அச்சில் வந்த முதல் தமிழ் பத்திரிகையின் பெயர் 'உதயதாரகை'.
- அது யாழ்ப்பாணத்திலிருந்தே வெளியாகியது.
- அச்சு இயந்திரத்தை அமெரிக்க மிசனரிகள் 1820ஆம் ஆண்டளவில் இங்கு இறக்குமதி செய்திருந்தாலும், ஆங்கிலேய காலனித்துவ அரசாங்கம் அதைப் பயன்படுத்த அனுமதிக்கவில்லை.
- 1834ஆம் ஆண்டளவிலேயே அனுமதித்தனர்.
- 1841 ஆம் ஆண்டு உலகின் முதல் தமிழ் பத்திரிகை இந்த அச்சு இயந்திரத்தில் அச்சடிக்கப்பட்டு தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வளாகத்திலிருந்து வெளியானது.

## வர்ணம் தீட்டுவோம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலுக்கு எமனாகுமா ஈரான்?

ஆர்.பிரகாஷ்



இஸ்ரேல் என்னும் நாட்டை இல்லாது செய்யவேண்டும் என்று தன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தைத் தொடர்ந்து, அதை அழுத்தம் திருத்தமான செயற்பாட்டுக் கொள்கையாகவும் தற்போது வரித்துக் கொண்டிருக்கின்றது ஈரான். சிரியாவில் உள்ள ஈரானியத் தூதரகத்துக்கு அருகில் கடந்த வாரம் நடத்தப்பட்ட தாக்குதலில் ஈரானின் புரட்சிகரக் காவல்படையின் இரண்டாம் தளபதி கொல்லப்பட்டதையடுத்தே இஸ்ரேலை மிகத்தீவிரமாக ஆட்கொள்ளவும் எதிர்க்கவும் ஈரான் தலைப்பட்டுள்ளது. இதன்படி, இஸ்ரேலுக்குள் இந்த வருடம் முன்னெப்போதும் இல்லாத இணையத் தாக்குதல்கள் நடத்தப்படும் என்றும் அனைத்து முனைகளில் இருந்தும் நெருக்கடி கொடுக்கப்படும் என்றும் ஈரான் அறிவித்திருக்கின்றது.

வழமையாகவே போர்மேகம் சூழ்ந்து உச்சக்கட்டப் போர்முனையாக விளங்கும் மத்திய கிழக்கில் , ஒரு நாடு இன்னொரு நாட்டை அழிக்கும் படியான தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அந்தத் தீர்மானத்துக்குச் செயல்வடிவம் கொடுக்கப்பட்டால் நிலைமை எவ்வளவு பாரதூரமாகும்?. இஸ்ரேலுக்கும் ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையிலான மோதலால் மத்திய கிழக்கே போர்ப் பூமியாக மாறியிருக்கின்ற நிலையில், இந்தப் போருக்குள் தன் நேரடித் தலையீட்டைச் செலுத்துவதற்கான அத்தனை ஏதுநிலைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றது ஈரான். ஆக, அண்மைக்காலமாக காஸாவில் நிலவும் மனிதப் பேரவலங்கள் இன்னுமின்னும் தீவிரமாகும் என்பதையே இந்தச் செய்திகள் கட்டியம் செய்கின்றன.

### பரம விரோதிகள்

இஸ்ரேல் ஒரு யூத நாடு. ஈரான் ஓர் இஸ்லாமிய தேசம். இவை இரண்டும் பாம்பும் கீரியும்போல காலாகாலமாகப் பரம விரோதிகள். இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு என்பது இம்மியும் சாத்தியம் இல்லாதது. மத்திய கிழக்கின் வல்லரசு யார் என்ற அதிகாரப் போட்டியில் இரு நாடுகளும் ஒரு பனிப்போரை நீண்டகாலமாகவே நடத்துகின்றன. இந்த அதிகாரப் போட்டியும், பலஸ்தீன விவகாரமும், அமெரிக்கத் தலையீடும்தான் ஈரான், இஸ்ரேல் இரண்டையும் தீண்டத்தகாத நிலைமைக்கு ஆட்படுத்திவிட்டுள்ளன. அத்துடன் எரிகின்ற நெருப்பில் அவ்வப்போது எண்ணெய் ஊற்றியும் விட்டுள்ளன. காலாகாலமாக இந்த மோதல் தொடர்ந்துவரும் நிலையில் தற்போதைய மோதல்களும் போர் நகர்வுகளும் நிலைமையை மேலும் பாரதூரமாக்கி விட்டுள்ளன.

### அணுவாயுத தேசங்கள்

இஸ்ரேலிடம் அணுவாயுதங்கள் இருக்கலாம் என்பது உலகின் பொதுமைப்பாடான கணிப்பு. அணுத் தொழில்நுட்பத்தில் கைதேர்ந்த அந்த நாடு அமெரிக்காவிடம் இருந்து எந்நேரத்திலும் தேவையான அளவு அணுவாயுதங்களைப் பெற்றுக்கொள்ளும் என்பதும் அனைவரும் அறிந்ததே. அமெரிக்காவில் அணுவாயுதங்களுக்குப் பஞ்சம் இல்லை. அதேநேரம் இந்த இரு நாடுகளுக்கும் இணையாக தன்னைப் பலப்படுத்தும் நடவடிக்கையிலும் ஈரான் இறங்கியுள்ளது. அணுவாயுதப்பரவலாக்கல் ஒப்பந்தத்தில் இருந்து கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் வெளியேறியிருந்த ஈரான் தற்போது யுரேனியத்தைச் செறிவூட்டும் நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியுள்ளது. இவை அனைத்தும் மத்திய கிழக்குக்கோ அல்லது உலகுக்கோ நல்ல செய்திகளாக இருக்கப்போவதில்லை. இஸ்ரேலுடன் ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா என இரண்டு போராளிக் குழுக்கள் ஆயுத மோதலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் இந்தப் போர் எந்த நிமிடத்திலும் எந்தக் கோணத்திலும் திசைதிருப்பப்படலாம்.

### மாறாத காட்சிகள்

ஈராக், சிரியா இரண்டு நாடுகளும் அமெரிக்காவாலும் அதன் கொள்கைகளாலும் மீண்டெழ முடியாத அளவுக்குச் சல்லடையாக்கப்பட்டுள்ளன. இந்தப் பட்டியலில் தற்போது பலஸ்தீனம், ஈரான், இஸ்ரேல் என்பனவும் இணைந்துவிடக்கூடிய செல்நெறியில் போர்க் களங்கள் விரிவடைந்து செல்வதே தன்னார்வ அமைப்புகளின் அங்கலாய்ப்பாக அமைந்துள்ளது.

---

திரா.ராஜ்



# கார்த்திகைப்பூக்களும் கைவிட்ட கட்சிகளும்

வடக்குப் பாடசாலைகளில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டிகளின்போது அமைக்கப்பட்ட இல்ல அலங்காரங்கள் மற்றும் விநோத உடைப் போட்டிகளின் போதான செயற்பாடுகள் தொடர்பில் சிறிலங்காவின் பாதுகாப்புத் தரப்பு விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றது. தேர்தல் காலம் என்பதால் இந்த விடயங்கள் தெற்கில் பூதாகரமாக்கப்படும்.

அதன் அடிப்படையில் தென்னிலங்கையிலுள்ள சிங்கள - பௌத்த கடும்போக்கு அமைப்புகளாலும் அரசியல் கட்சிகளாலும் இது தொடர்பில் முறைப்பாடுகள் செய்யப்பட்டு, விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நிர்வாக ரீதியான விசாரணைகள் தனியாகவும், பாதுகாப்புத் தரப்பினரது விசாரணைகள் தனியாகவும் நடைபெறுகின்றன. பாடசாலைகளின் இல்ல அலங்காரங்கள் சர்ச்சைக்குள்ளாவது இதுவொன்றும் முதல் முறையல்ல. இதற்கு முன்னரும் சில தடவைகள் இவ்வாறு நடைபெற்றிருக்கின்றன. இப்போது அவை ஊதிப்பெருப்பிக்கப்பட்டிருக்கின்றன. பாடசாலைகளின் இல்ல அலங்காரங்கள் ஊடாகவும், விநோத உடைப் போட்டிகள் ஊடாகவும் சமகாலப் பிரச்சினை களை பேச முனைந்தமை எந்த வகையில் தவறாகும்? இம்முறை பாடசாலை விளையாட்டுப் போட்டியில் தற்போது கனடாவை நோக்கிய புலம்பெயர்வு தொடர்பான இல்ல அலங்காரமும் இடம்பெற்றிருந்தது. அவையனைத்தும் சமகாலத்தில் நடைபெறும் நிகழ்வுகளின் கண்ணாடியாக அமையப்பெற்றிருந்தன. அப்படியிருக்கையில் வெடுக்குநாறிமலையில் நடந்தேறியமை உள்ளிட்ட சில விடயங்களை வெளிப்படுத்தும் வகையில் சிவனை பிக்கு கைதுசெய்து செல்வதைப்போன்ற விநோத உடை அலங்காரத்தை மாத்திரம் எவ்வகையில் சர்ச்சைக்குரியதாக்கமுடியும்?

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் என்பதே மாணவர் சமூகத்திடமிருந்தே தோற்றம் பெற்றிருந்தது. அடக்குமுறைக்கு எதிரான எழுச்சி என்பது மாணவர்களிடத்திலிருந்து இலகுவாக எழக்கூடியது. அந்தப் பருவ வயது உணர்ச்சிகரமானது. அப்படிப்பட்ட மாணவர் சமூகம் இன்று சிக்கிச் சின்னாபின்னமாவதாகக் கவலைப்படுவோரே அதிகம். போதைப்பொருள் பாவனையாலும், தறிகெட்ட தென்னிந்தியக் கலாசார இறக்குமதிகளாலும் அவர்கள் தடம்புரட்டப்படுகின்றார்கள் என்ற வேதனையான பதிவுகளே மிகுந்துள்ளன. இப்படியானதொரு நிலையில் அத்தகைய மாணவர்கள், தமது சமூகத்தின் மீதான அடக்குமுறைக்கு எதிராக தமக்குக் கிடைத்துள்ள இடைவெளியில் குரல் எழுப்ப முனைந்திருக்கின்றார்கள். அதை அவர்கள் சாத்தியமாக்கியுமிருக்கின்றார்கள். இலங்கை அரசமைப்பில் இருக்கின்ற கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை, அரசமைப்பின் எல்லையை மீறாத வகையில் பயன்படுத்தியிருக்கின்றார்கள். வரிகளுக்கு இடையில் செய்திகளைச் சொல்வதைப்போல அவர்கள் சில விடயங்களை பூடகமாகச் சொல்லியிருக்கின்றார்கள்.


மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு விடயத்தையும் சட்டரீதியாக சவாலுக்கு உட்படுத்த முடியாத நிலையே பாதுகாப்புத் தரப்பிடம் காணப்படுகின்றது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழோ அல்லது வேறு எந்தவொரு குற்றங்களின் கீழோ மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியாத நிலையில், அவர்களை அச்சுறுத்தும் குறிப்பாக உளவியல் போரை சிறிலங்காவின் பாதுகாப்புத் தரப்பும், அதன் அரச திணைக்களங்களும் முன்னெடுத்துள்ளன. அதன் ஒரு கட்டமாகவே அவர்களை அழைத்து வாக்குமூலம் பெறுவது, வீடுகளுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொள்வது, நிர்வாக ரீதியான விசாரணைகளை முன்னெடுப்பது என்று ஒரு வகையான அலைக்கழிப்புகள் மனத்தாக்கங்களை ஏற்படுத்தி எதிர்காலத்தில் இவ்வாறான சிந்தனைகள் எழக்கூடாது என்று பௌத்த- சிங்கள பேரினவாத அரசும் அதனைச் செயற்படுத்தும் அதன் திணைக்களங்களும் செயலாற்றுகின்றன.

இந்த விடயத்தில் மாணவர்களுக்காக அந்த ஆசிரியர் சமூகத்துடன் சேர்ந்து நின்று குரல் எழுப்பவேண்டிய தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளாகட்டும், அரசியல் செயற்பாட்டாளர்களாகட்டும், மனித உரிமைக் காவலர்களாகட்டும் எல்லோரும் மௌனிகளாக இருக்கின்றமை ஆச்சரியமாக உள்ளது. எதிர்ப்புகள் எழாதவரையில் -பலமான குரல்கள் ஒலிக்காத வரையில் பௌத்த- சிங்கள பேரினவாதம் தனது தொல்லை கொடுக்கும் போக்கை கைவிடாது. எனவே, இத்தகைய உளவியல் ரீதியான அச்சுறுத்தலுக்காக தொடுக்கப்படும் விசாரணைகள் உட்பட அனைத்துக்கும் எதிராக தமிழ்த் தேசிய தரப்புகள் குரல் எழுப்புவதுடன் அதைச் சட்டரீதியாகவும் சவாலுக்கு உட்படுத்தவும்வேண்டும். தங்கள் கட்சிப் பிரச்சினைக்காக நீதிமன்றப்படியேறியுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி, தன்னை தமிழ் மக்களின் பிரதான கட்சி என்று மார்தட்டிக்கொண்டாலும், இந்த விடயத்தில் அது மௌனியாகவே இருக்கின்றது. அதேபோலவே ஜனநாயக தமிழ்த் தேசியக்கூட்டணியாகட்டும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாகட்டும் எல்லோருமே மாணவர்களுக்கு கரம் கொடுக்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

இது சிங்கள - பௌத்த பேரினவாதிகளுக்கு இன்னமும் உற்சாகத்தையே கொடுக்கும். மனவுளைச்சல்களால் மாணவர் சமூகமும் எதிர்காலத்தில் தமக்கு ஏன் வீண் வம்பு என்று ஒதுங்கவும் கூடும். அந்த நிலைமை வராமல் இருக்க வேண்டுமானால், அரசாங்கத்தின் இந்த எதேச்சதிகாரங்களுக்கு எதிராகக் குரல் எழுப்ப வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ கோகுலராகவன்



# உடலே ஆயுதம்

தாத்திரிக்குட்டி என்ற பெண்ணின் கதையை விரசமில்லாமல் கவனமாக எழுத வேண்டி இருக்கிறது .

நம்பூதிரி குலத்தைச் சேர்ந்த ராமன் நம்பூதிரிக்கும் தாத்திரிக்குட்டிக்கும் திருமணம் நடக்கிறது. நம்பூதிரி குடும்பத்தின் இரண்டாவது மகன்தான் ராமன் நம்பூதிரி . மூத்தமகன் இருக்கையில் இரண்டாவது மகனுக்குத் திருமணம் செய்ய முடியாதே. ஆனால் மூத்த மகன் குழந்தைப் பாக்கியம் இல்லாதவனாகவும் நோய்வாய்ப்பட்டவனாகவும் இருக்கும் பட்சத்தில் இரண்டாவது மகன் திருமணம் செய்யலாம்.

திருமணம் முடிகின்றது.

தாத்திரி சந்தோசமாக முதலிரவு அறையில் நுழைகின்றாள். அவளுக்கு பேரதிர்ச்சி, ஏனெனில் அங்கே தம்பி ராமன் நம்பூதிரிக்குப் பதிலாக அண்ணன் நம்பூதிரி தான் இருந்தான். அவனோ தீராத நோய்வாய்ப்பட்ட சீக்காளி.

தாத்திரி முதல்முதலாக தன் வாழ்வில் அருவருப்பை உணர்கிறாள்.

ஆனால் -

கேள்வி கேட்க முடியாது.

தான் ஏமாற்றப்பட்டதை தாத்திரி உணர்ந்து கொண்டாளே தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

இதுவே நம்பூதிரிகளுக்கு பாடம் கற்பிக்கவேண்டும் என்று தாத்திரி முடிவு செய்து கொண்ட இடம். தன்னை ஏமாற்றியது போல் அவளும் கணவனை ஏமாற்றத் தொடங்கினாள்.

தாத்திரிக்கு அவள் வீட்டில் கதகளி ஆட வந்த கலைஞனுடன் உறவு ஒன்று ஏற்பட்டு இருந்தது .

இதுவே அவள் வாழ்வில் வந்த ஒரே ஒரு அழகிய காதல்.

இவை தவிர தாத்திரி மீதான உடல் ரீதியான சுரண்டல் அந்த வீட்டில் இன்னும் நிகழ்ந்து கொண்டிருந்தது.

தாத்திரிக்குட்டி ஈடிணையில்லாத பேரழகி.

அவள் அழகின் புகழ் சுற்று வட்டாரத்தில் பரவி இருந்தது. இதனைக் கேள்விப்பட்டு தாத்திரியை இரகசியமாக தேடி வந்தவர்கள் உண்டு.

தாத்திரி யாரையும் நிராகரிக்கவில்லை. அவளது நோக்கம் கைகூடத் தொடங்கியது. மாளிகை போன்ற அவளது கணவன் வீடு எல்லாவற்றுக்கும் சாதகமானது. அதைவிட வெளியிட நபர்களைச் சந்திக்க அவளது பணிப்பெண் உதவி புரிவாள்.

தாத்திரியின் அழகில் மயங்கியவர்கள் ஏதோ ஒரு பரிசை அவளுக்கு வழங்கி இருந்தனர். பரிசுகளை தாத்திரி ஆதாரங்களாகப் பாதுகாத்து வைத்திருந்தாள். பரிசு கொடுக்காதவர்களின் உடல் அங்க அடையாளங்களை, மச்சங்களை தாத்திரி ஞாபகப்படுத்தி வைத்திருந்தாள்.

ஒருநாள் எல்லாவற்றுக்கும் தேவை வரும்.




இனி பழிவாங்கத் தொடங்கலாம் என்ற கட்டத்தில் தாத்திரி தன்னுடைய வழமையான இரகசிய இடத்துக்கு பேரழகி ஒருத்தி வந்திருக்கிறாள் என்ற செய்தியை மறைமுகமாக, ராமன் நம்பூதிரி எனும் தனக்கு தாலி கட்டிய கணவனுக்கு அனுப்பினாள்.

பேரழகியைச் சந்திக்க ராமன் நம்பூதிரி ஆவலாக வந்தான். இரவு நேரம் என்பதால் சந்தித்த பின்னரே அவள் தன் மனைவி என்பதை அவன் அடையாளம் கண்டு கொண்டான்.

அவனுக்கு கோபம் தலைக்கேற அவளைப் பாய்ந்து தாக்கினான், தாத்திரி சிரித்தாள். இனிப்பயனில்லை என உணர்ந்த ராமன் நம்பூதிரி . 'ஸ்மார்த்த' விசாரணைக்கு அரசனிடம் கோரிக்கை விட்டான்.

தாத்திரியின் திட்டம் பலிக்கத் தொடங்கியது.

தாத்திரி மீதான "ஸ்மார்த்த விசாரம்" என்கிற விசாரணை நாற்பது நாட்கள் வரை நடந்தது.

39 நாட்கள் வரை தாத்திரி வாய் திறக்கவில்லை. இதற்குக் காரணம் என்னவென்று யாருக்கும் தெரியாது.

"ஐந்தாம் புரையில் விடப்போகிறோம்"

என்ற எச்சரிக்கை விடப்பட்டபோது நாற்பதாம் நாளில் தாத்திரி வாய் திறந்து கோரிக்கை ஒன்றை முன்வைத்தாள்.

தன் மீது நடத்தப்படும் விசாரணை போல, தான் கூறும் நபர்கள் மீதும் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படவேண்டும் என்பதே அது.

இது 'ஸ்மார்த்தனால் ' உறுதி செய்யப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டது.

தாத்திரி எல்லாமாக அறுபத்து நான்கு நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டாள்.

இதில் இரண்டு பேர் அவளது இரத்த உறவினர்கள் என்பது மிகக் கேவலமானது.

அதற்கான ஆதாரங்களை அவள் முன் வைத்தாள்.

ஸ்மார்த்தன் திடுக்கிட்டு போனான்.

பிரபல்யமான நம்பூதிரிகள், சமூகச் செல்வாக்கு கொண்டவர்கள், அரச அதிகாரிகள், தளபதிகள், நீதிபதிகள் என வரிசையாக விசாரணைக்கு வந்தனர்.

ஆதாரங்களை தாத்திரி அள்ளி அள்ளி எறிந்தாள்.

முதலிலே மறுத்தவர்கள் தாமே கொடுத்த ஆதாரங்களே தம்முன்னே வந்து விழுந்தால் என்ன செய்ய முடியும்?

ஒத்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. அவமானத்தால்வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலை. நம்பூதிரிகள் வீட்டுக்குள்ளே முடங்கி கொண்டனர் . வெளியில் தலைகாட்ட முடியவில்லை.

அறுபத்தைந்தாவது ஆதாரமாக தாத்திரி ஒரு மோதிரத்தைக் காட்டி "இவர் பெயரையும் சொல்லவா" என கேட்டாள்.

ஸ்மார்த்தனுக்கு தலை சுற்றாத குறை அல்லது சுற்றி விழுந்தானா? தெரியாது.

அந்த மோதிரம் யாருடையது என்ற இரகசியம் கடைசி வரை வெளிவரவில்லை. அது "கொச்சி அரசனது" அல்லது "பிரபல்யமான அரச அமைச்சனுடையதாக" இருக்கலாம் என இன்றுவரை ஊகிக்கப்படுகிறது.

இத்தோடு ஸ்மார்த்தன் பயந்து போய் விசாரணையை நிறுத்திவிட்டு அரசனுக்கு அறிக்கையைச் சமர்ப்பித்தான்.

அரசன் அறுபத்தி நான்கு பேரையும், தாத்திரியையும் நாடு கடத்த உத்தரவிட்டான்.

இத்தோடு நம்பூதிரிகளின் எதேச்சதிகாரம் கேரளாவில் ஆட்டம் காணத் தொடங்கியது. அரசவையில் இருந்து தூக்கி எறியப்பட்டனர். கனவான் மதிப்பும் தவிடுபொடியாகியது.

ஊரை விட்டு ஒதுக்கப்பட்ட தாத்திரி அதன் பின் கேரளாவில் வாழ்ந்தமைக்கு ஆதாரங்கள் இல்லை. அவள் தமிழ்நாட்டுக்கு வந்து இந்தியப் புகையிரத திணைக்களத்தில் வேலை செய்த ஆங்கிலோ இந்தியன் ஒருவனை திருமணம் செய்து வாழ்ந்தாகத் தகவல்கள் உண்டு .

இந்தத் திருமணத்தில் அவளுக்கு இரண்டு பெண் குழந்தைகளும், ஓர் ஆண் குழந்தையும் பிறந்ததாகவும் சொல்லப்படுகின்றது. ஆனால் அந்தத் தகவலுக்கு எந்த ஆதாரமும் இல்லை.

இதில் ஒரு மகளின் மகள் (பேர்த்தி) "பிரபல்யமான மலையாள திரைப்பட நடிகை" என்ற தகவல் வெளியானது. ஆனால் குறித்த நடிகை சில காலங்களுக்கு முன் அதனை மறுத்திருந்தார். நாடு கடத்தப்பட்ட 64 பேரில் இருவர் தவிர ஏனையோர் என்ன ஆனார்கள் என்று தெரியாது.

அந்த இருவரில் ஒருவரான கதகளிக் கலைஞர் பசி பட்டினியோடு கேரளாவில் வயல் வெளியெல்லாம் அலைந்து அங்கெல்லாம் கதகளி ஆடி இதுவரை நம்பூதிரிகளின் வீட்டுக்குள் முடக்கப்பட்ட கேரளாவின் கதகளிக்கலையை பொதுக்கலையாக வெளியே கொண்டு வந்தார்.

இதன் மூலம் அரசவைக்கு கதகளி ஆட அழைக்கப்பட்டு அரசனின் விருதையும் பெற்றார்.

இன்னொருவர் கேரளாவில் நீதிபதியாக இருந்தபோதே தாத்திரிக் குட்டியால் குற்றஞ்சாட்டப்பட்டவர்.

இயல்பில் அமைதியான மனிதரை தாத்திரி வீணாகப் பழி சுமத்தி இருப்பாளா? என சந்தேகிக்கின்றனர். அல்லது இந்தப் பூனையும் பால் குடிக்குமா? தெரியாது.

அந்த மனிதர் கடைசி வரை அவர் மீதான குற்றச்சாட்டை மறுத்தபடி இருந்தார்.

பன்றிகளோடு சேர்ந்த கன்றாகிப் போன நிலையில் அவர் வாதம் எடுபடவில்லை. அவரையும் அவரது குடும்பம், மனைவி , பிள்ளைகள் கைவிட்டுவிட்டனர்.

சில நாட்கள் ஊரைவிட்டு வெளியேறி அலைந்து திரிந்தார்.

பின் மனம் மாறி கேரளா கிராமப்புறத்தைச் சேர்ந்த ஒரு ஏழைப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு வேலை தேடி இலங்கை கண்டியில் வசிக்க வந்தார்.

அங்கே அவருக்கு இரண்டு மகன்கள் பிறந்தார்கள்.

ஆனால் அவரது மனதில் தன் மீதான பழி அவதூறான ஒன்று என்ற மனக்கவலை அவரை நோயாளியாக்கி பின் இறந்து போனார்.

அதன் பின் அவரது மனைவி இந்தியா திரும்பி கேரளா போகாமல் தமிழ்நாட்டில் வாழ்ந்தாகக் கூறப்படுகின்றது. வறுமையின் காரணமாக தன் பிள்ளைகளை நாடகம் நடிக்க அனுப்பினாள்.

அதில் இளைய மகன் சினிமாவில் உச்ச நடிகனாக உயர்ந்து சினிமாவிலும், அரசியலிலும் புகழ் பெற்றவராக வாழ்ந்து மறைந்து போய்விட்டார். அவர் வேறு யாருமல்லர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தான். தாத்திரிக் குட்டி உடலை ஆயுதமாக்கி கேரள நம்பூதிரிகளின் கொட்டத்தை அடக்கியவள். நம்பூதிரி குடும்பப் பெண்களின் விடுதலைக்கு ஆரம்ப வித்திட்டவள். இதன் பின் பல மாற்றங்கள் வந்தன என்பதே உண்மை. தாத்தரியின் கதையை அடிப்படையாக வைத்து மலையாளத் திரைப்பட இயக்குநர் ஹரிகரன் பரிநாயம் (தமிழில் திருமணம்) என்ற மலையாள படத்தை இயக்கினார். ஆனால் அது தாத்திரியின் கதையை அவளது துயரங்களோடு, கலந்து முழுமையாக சொல்லவில்லை.

சில சமரசங்களைச் செய்ததாக மட்டுமே கொள்ள முடியும். ஆலங்கோடு லீலா கிருஸ்ணன் எழுதிய "தாத்திரிக் குட்டியின் ஸ்மார்த்த விசாரம்" என்ற மலையாள நூல் அவளது முழுமையான வரலாற்றை தரும் நூலாக கொள்ளமுடியும். இதை யூமா வாசுகி தமிழில் மொழிபெயர்த்து தந்திருக்கிறார். தாத்திரிக்குட்டி ஓர் உதாரணம்.

# ஊர்ப்புதினம்



பாகம் 2

○ இராகவன்

நெல்லியடிச் சந்தியிலிருந்து சென்றல் ஸ்கூலுக்குப் போற திருப்பத்தின்ர இடப் பக்க மூலையில அந்தக் கடையிருந்தது. 'வீரகேசரி' எண்டு பெரிய எழுத்தில போட் போட்டிருக்கும். அதுக்குக் கீழை சின்ன எழுத்தில 'லக்ஸ்மி ஸ்ரோர்ஸ்' எண்டிருக்கும். அப்ப வீரகேசரி, மித்திரன், சண்டே எக்ஸ்பிரஸ் பேப்பரெல்லாம் அந்தக் கடையிலதான் விக்கிறது. அதோட கல்கி, குமுதம், ஆனந்தவிகடன், பேசும்படம், பொம்மை, பிலிமாலயா, அம்புலிமாமா, ரத்னபாலா, பாலமித்ரா, ஜெமினிசினிமா எண்டு ஒருதொகை தமிழகச் சஞ்சிகையள் கிழமை தவறாமல் வந்து விலைப்படும். நான் வழமையா அங்கைதான் பேப்பர், மகசீனெல்லாம் வாங்குவன்.

ஒரு பத்து வருசத்துக்கு முந்தியும் அந்தக் கடையிருந்தது. ஒரு வயதுபோன வெள்ளைப் பொட்டுப் போட்ட கறுவல் ஐயா ஒருத்தர் கடைக்குள்ளயிருப்பார். சில வேளையளில அவரின்ர மகனும் கடையில நிப்பார். வீரசேகரியின்ர வடமராட்சி முகவர் அந்தக் கடைக்கார ஐயா தான் எண்டு பிறகு கேள்விப்பட்டன். இப்ப அந்தப் பெயரில கடையில்லை. வேறையாக்கள் வாங்கி வேற பேரில நடத்துகினம். பாடசாலை உபகரணங்கள் விக்கிற கடையாக இப்ப அது இருக்குது. அதெல்லாம் ஒரு பொற்காலம்.

34

ம்... இப்ப விசயத்துக்கு வருவம். நவண்ணா இன்னொரு விசயத்திலயும் முன்னோடியாயிருந்தான். அவன் வீட்டில ஒரு நூலகம் வைச்சிருந்தான். அவனிட்ட வீரசேகரிப் பிரசுரம் முழுக்க இருந்தது. ராணிமுத்துவும் எக்கச்சக்கமா இருந்தது. அதைவிடப் பொம்மை, பேசும்படம், சினிமா எக்ஸ்பிரஸ், பிலிமாலயா எண்டு மகசீனுகளும் ஒரு தொகை இருந்தது. எங்கட அம்மாவுக்கு நல்ல வாசிப்புப் பழக்கமிருந்தது. இப்பவுமிருக்கு. எங்கட அம்மாவுக்கு இப்ப எண்பத்தாறு வயதாச்சு. இண்டைக்கும் கண்ணாடி போடாமல் பேப்பர் வாசிக்கிறா. ஊசி கோத்துக் கிழியல் தைக்கிறா. அவா நவண்ணாவிட்ட புத்தகங்கள் எடுத்து வாசிக்கிறது வழக்கம். வாசிச்சிட்டு புத்தகங்களைத் திருப்பிக் கொண்டே குடுக்கேக்குள்ள அதைப் பற்றி டிஸ்கசனும் நடக்கும். அதில வீரகேசரிப் பிரசுரமா வந்த இரா. உதயணன் எழுதிய 'பொன்னான மலரல்லவோ?' எண்ட நாவலைப் பற்றி எங்கட அம்மாவும் நவண்ணாவும் டிஸ்கஸ் பண்ணினது எனக்கு இப்பவும் நல்ல ஞாபகமிருக்கு. பிறகு அம்மா தான் வாசிச்சுத் தன்னைப் பாதிச்ச நாவல்களின்ர கதையெல்லாம் தன்னோட கதைக்கவாற பொம்பிளையளுக்கு விலாவாரியாச் சொல்லுறதும் வழக்கமாயிருந்தது. அதால சிலர் அம்மாவோட கதைக்க வாறதையும் நிப்பாட்டியிருக்கினம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரஜீவன் ராம்

# இலங்கைக்குள் தமிழ்த்தேசியம்

## வரலாறும் அதன் பயணப்பாடும் 8





**1960** தொடக்கம் 1965 வரையான சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கத்தால், தமிழரசுக் கட்சியினரால் முன்னெடுக்கப்பட்ட தமிழ் இன உரிமைப்போராட்டங்கள் திட்டமிட்டு நசுக்கப்பட்டன. இதனால் தளர்வடைந்த செல்வநாயகம், தமிழ்மக்களின் உரிமைப் போராட்டம் வெற்றிபெறுவதற்கு தென்னிலங்கையில் ஆட்சி மாற்றம் நிகழ்வது அவசியமானது எனக் கருதினார்.

இந்நிலையில் 1965 ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றது. அந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியினால் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளமுடியவில்லை. எனவே ஆட்சி அதிகாரத்தினைக் கைப்பற்றிக் கொள்ள, கூட்டரசாங்கத்தை அமைக்க டட்லி சேனநாயக்கா தமிழரசுக்கட்சிக்கு அழைப்பு விடுத்தார்.

இந்தச் சூழ்நிலையை, தமிழர்கள் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியம் என செல்வநாயகம் சிந்தித்தார். டட்லி சேனநாயக்காவை சந்தித்து தமிழ்மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைத்தார். இந்தக் கலந்துரையாடலின் முடிவில், தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஓர் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதுவே 'டட்லி செல்வா' உடன்படிக்கை. 1965 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24 ஆம் திகதி இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இதன் மூலம் தமிழரசுக்கட்சி உள்ளடங்கலாக, ஏழு கட்சிகள் இணைந்து அரசாங்கத்தை அமைத்தன. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சியின் உறுப்பினரான மு.திருச்செல்வத்துக்கு உள்ளூராட்சி அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டது.

### தமிழ்மக்களின் ஏழரைச்சனியன்

ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டரசாங்கம் தொடர்பாக பலர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தனர். குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியின் பிரமுகர் வி.பொன்னம்பலம் இந்த ஆட்சியை 'ஏழரைச்சனியன் ஆட்சி' என வர்ணித்தார். அவர் வர்ணித்ததைப் போல தமிழர்களுக்கு இந்த ஆட்சி ஏழரைச்சனியன் ஆட்சியாகவே அமைந்தது. அரசாங்கத்தின் பங்காளியான பிறகு தமிழரசுக் கட்சியினரால் முன்னெடுக்கப்பட்ட தமிழரின் உரிமைப் போராட்டம் மௌனிக்கப்பட்டது. தனிச் சிங்களச் சட்டத்துக்கு எதிரான சத்தியாக்கிரகப் போராட்டத்தை மூடைகட்டி வைத்துவிட்டு அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட தமிழரசுக் கட்சி தயாரானது. இங்கு முக்கியமான விடயம் யாதெனில் 1958 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பண்டா - செல்வா உடன்படிக்கையை கடுமையாக எதிர்த்த ஐக்கிய தேசியக் கட்சியுடன், இம்முறை செல்வநாயகம் 'டட்லி - செல்வா' உடன்படிக்கையை மேற்கொண்டிருந்தார்.

நாள்கள் பல கடந்தன, எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டரசாங்கம் 'டட்லி - செல்வா' ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தாது மௌனம் காத்தது. டட்லியின் மௌனத்தைக் கலைக்க தமிழரசுக் கட்சியினர் டட்லியை நேரில் சந்தித்து 'டட்லி - செல்வா' உடன்பாட்டின் அடிப்படையில் மாவட்ட சபைகள் உருவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார். இதன் விளைவாக 1966 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் திகதி இடம்பெற்ற சிம்மாசன உரையின் போது மாவட்ட சபைகள் உருவாக்கப்படுவது தொடர்பான தமது எண்ணத்தை டட்லி தலைமையிலான அரசாங்கம் வாய் திறந்து கூறியது. அதன் அடிப்படையில் மாவட்ட சபைகளை உருவாக்குவது தொடர்பில் தமிழரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சுகளை நடத்த ஆரம்பித்தது. உள்ளூராட்சி அமைச்சர் மு.திருச்செல்வத்தினால் மாவட்ட சபைகள் தொடர்பான சட்ட வரைவு ஒன்றும் தயாரிக்கப்பட்டது.

மறுபுறம் மாவட்ட சபைகள் பற்றிய சட்ட மூல வரைவுகளுக்கு எதிரான எதிர்ப்புக் குரல்களும் வலுக்க ஆரம்பித்தன. குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் இந்தச் சட்டவரைபின் மூலம் 'டட்லி சேனநாயக்க எமது தாய்நாட்டை தமிழரசுக் கட்சியிடம் அடகு வைத்துவிட்டார்' என பிரசாரம் செய்ய ஆரம்பித்தனர். இதனால் கலக்கம் அடைந்த டட்லி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் விமர்சனத்துக்குப் பதிலளிக்கையில், 'எனது எதிரிகள் நான் சமஷ்டிக் கட்சியினருடன் (தமிழரசுக் கட்சி) ஒப்பந்தமொன்று செய்துவிட்டதாக அண்மைக்காலத்தில் பிரசாரம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். நான் செய்ததெல்லாம் சமஷ்டிக் கட்சியினரின் ஆதரவுடன் அரசாங்கம் ஒன்றை அமைத்ததுதான். இந்நாட்டின் பல்லின, பல்மத மக்களின் ஆதரவுடன், ஒத்துழைப்புடன் உருவானதே இந்த தேசிய அரசாங்கம். இந்த அரசாங்கத்தின் நோக்கம் கடந்த 9 ஆண்டுகளாக இந்த நாட்டுக்கு மறுக்கப்பட்ட பொருளாதாரச் சுதந்திரத்தை மீட்டெடுப்பதாகும்' என்று கூறினார். இந்தப் பேச்சின் மூலம் எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்பட்ட விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க டட்லி முற்பட்டார்.

### சமஷ்டியை வலியுறுத்திய அமைச்சர் திருச்செல்வம்

ஆனால், 1966 ஆம் ஆண்டு நவம்பரில் மன்னாரில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிக் கூட்டமொன்றில் உரையாற்றிய அமைச்சர் மு.திருச்செல்வம், தான் சமஷ்டித் தீர்வையே விரும்புவதாகவும், அந்த நிலைப்பாட்டில் தான் உறுதியாக இருக்கின்றேன் எனவும் உரையாற்றினார். இந்தப் பேச்சை அப்படியே இறுகப் பற்றிய 'டெய்லி நியூஸ்' பத்திரிகை 'சமஷ்டியே சிறந்ததொரு அரசாங்க முறை என்கிறார் திரு' என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டது.

இந்தச் செய்தி வெளியாகி, அரசாங்கத்துக்குள் கடும் சலசலப்பை உருவாக்கியது. நாடாளுமன்றத்தில் திருச்செல்வத்தின் பேச்சு விவாதப் பொருளானபோது, பிரதமர் டட்லி சேனநாயக்க, அமைச்சர் திருச்செல்வத்தின் சமஷ்டி கருத்துப் பற்றி கூறுகையில் 'அமைச்சரான அவர் ஒரு கருத்தைச் சொல்லும் போது, அது அரசாங்கத்தின் கொள்கையாகவே பார்க்கப்படும். ஆகவே, கூட்டுப் பொறுப்பு நிமித்தம் இதுபோன்ற கருத்துச் சொல்வதை அவர் தவிர்க்கவேண்டும்' எனக் கண்டிப்புடன் கூறினார்.

டட்லியின் இவ்வாறான அணுகுமுறைகள் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தின. எனவே சில குறிப்பிட்ட தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடனான கூட்டரசாங்கத்துக்கு எதிரான தமது கருத்துரைகளை முன்வைக்க ஆரம்பித்தனர்.

ஒரு கட்டத்தில், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், கட்சித் தலைமையிடம் 'தமிழரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயற்பட வேண்டும்' என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

எனினும் இந்தக் கோரிக்கைகளுக்கு தமிழரசுக் கட்சியின் தலைமை சற்றும் செவிசாய்க்காது, ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தைப் பயன்படுத்தி, வடக்கு - கிழக்கில் செய்யக்கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தது.

குறிப்பாக திருகோணமலையில் ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகத்தை நிறுவுதல், திருக்கோணேஸ்வரர் ஆலய வளாகத்தைப் புனித பிரதேசமாகப் பிரகடனம் செய்தல் போன்றன அவர்களின் திட்டங்களாக இருந்தன. இதனடிப்படையில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த திருச்செல்வம் திருக்கோணேஸ்வரர் ஆலய வளாகத்தைப் புனிதப் பிரதேசமாக பிரகடனப்படுத்தவேண்டும் எனும் நோக்கில் ஒரு குழுவை நியமித்தார். இந்த நியமனமானது 1968 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 27 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### புதைக்கப்பட்ட டட்லி - செல்வா ஒப்பந்தம்

இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியான சிறிது நாள்களுக்குள்ளேயே பௌத்த பிக்குகள் இவ்விடயம் தொடர்பிலான தனது கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்த ஆரம்பித்தனர். ஒரு புறம் எதிர்க்கட்சியினர், மறுபுறம் பௌத்த பீடங்கள் என 'சிங்கள - பௌத்த தேசியவாதம் மீண்டும் வலுப்பெற ஆரம்பித்து. இதை நன்குணர்ந்த டட்லி, செல்வநாயகத்துடனான 'டட்லி-செல்வா' உடன்படிக்கையை குழிதோண்டி புதைக்கத் தயாரானார். மு.திருச்செல்வம் கூறுவதுபோல் திருக்கோணேஸ்வரர் ஆலய வளாகம் புனிதப் பகுதியாக பிரகடனப்படுமாயின் அந்தப்பகுதி 'சிங்களம் மற்றும் பௌத்தர்' அல்லாதவர்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிடும் என்ற காரணத்தைக்கூறி குறித்த நடவடிக்கையை ஒத்தி வைக்குமாறு உத்தரவிட்டார்.

டட்லி தலைமையிலான கூட்டரசாங்கத்தால் தமிழரசுக் கட்சி தொடர் ஏமாற்றங்களையும் துரோகங்களையும் சந்தித்த காலம் அது. இனியும் பொறுமை காத்து பயனில்லை என உணர்ந்த திருச்செல்வம் 1968 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தனது அமைச்சுப் பதவியைத் துறந்தார். அமைச்சுப் பதவியில் இருந்து விலகிய திருச்செல்வம் 'செனட்' சபையில் உரையாற்றிய போது 'பௌத்த பிக்குவொருவரின் எதிர்ப்பின் பேரில் நடவடிக்கை எடுத்த பிரதமர், இந்த நாட்டின் ஒட்டுமொத்த இந்துக்களின் வேண்டுகோளை உதாசீனம் செய்துவிட்டார்' என டட்லியை கடுமையாக விமர்சித்தார். திருச்செல்வம் அமைச்சுப்பதவியைத் துறந்த பின்னரும் தமிழரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியுடனான கூட்டரசாங்கத்தை விட்டு விலகவில்லை. அதற்குப் பதிலாக 'விமர்சனத்துக்குட்பட்ட ஆதரவை' வழங்க செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சியினர் முன்வந்த னர். அதாவது, ஆளுந்தரப்பையோ, எதிர்த்தரப்பையோ சாராத, எதிரணி வரிசையில் அமர்ந்துள்ள ஒரு சுதந்திரக் குழுவாக, டட்லி தலைமையிலான அரசாங்கத்துக்கு தமிழரசுக் கட்சி ஆதரவு வழங்கியது.



(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



○ ந.பரமேஸ்வரன்

# நிலம் விழுங்கும் அரசியல்

சலுகைகளுக்காகவும் பதவிகளுக்காகவும் கிறிஸ்தவமதத்தை தழுவியிருந்த சிங்கள அரசியல்வாதிகள் இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் வாக்கு வங்கி அரசியலுக்காக பௌத்த மதத்தை தழுவி சிங்கள பௌத்த அரசியலை முன்னெடுத்தனர். இலங்கையை சிங்கள= பௌத்த நாடாக மாற்றும் சதித் திட்டங்கள் இலங்கை சுதந்திரமடைய முன்னரே ஆரம்பிக்கப்பட்டு விட்டன. இலங்கையின் முதலாவது பிரதமர் டொன் ஸ்டீபன் சேனநாயக்க, சொலமன் றிட்ஜ்வே டயஸ் பண்டாரநாயக்கா, ஜூனியஸ் றிச்சார்ட் ஜெயவர்த்தன ஆகிய கிறிஸ்தவர்கள் சிங்கள வாக்கு வங்கியை கைப்பற்றுவதற்காக தங்களை பௌத்தர்களாக மாற்றிக்கொண்டனர்.

இலங்கையின் முதலாவது பிரதமர் டொன் ஸ்டீபன் சேனநாயக்க விவசாய அமைச்சராக இருந்த காலத்திலேயே தமிழர்களின் பூர்வீக நிலங்களை சிங்கள மயமாக்கும் திட்டத்தை ஆரம்பித்து விட்டார். அப்போது அரசியலில் ஈடுபட்டிருந்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்றோரும் சமபல பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தினரேயன்றி சிங்களக் குடியேற்றங்களைப்பற்றி கண்டு கொள்ளவில்லை. சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பிப்பதற்கு குளங்களை அண்டிய பிரதேசங்களையே இவர்கள் தெரிவு செய்தனர்.

**சிங்களவர்களின் கைகளில். கந்தளாய் இன்று கந்தலே ஆகிவிட்டது. ஆதி கோணேசர் ஆலயம் அமைந்துள்ள தம்பலகமம் 'தம்பக முவ' ஆகிவிட்டது. கந்தளாய் இன்று சிங்களப்பிரதேசம்.**

சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பிப்பதற்கு டீ.எஸ்.சேனநாயக்க முதலாவதாக தெரிவு செய்த இடம் பாவற்குளம். குளத்தை மையமாக வைத்து குடியேற்றத்தை ஆரம்பித்தால் மக்களை விவசாயத்தில் ஈடுபடுத்தலாம். நீர்ப்பாசன வசதி தாராளமாகக் கிடைக்கும். மக்கள் விவசாயத்தின் மூலம் தமது வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்ளலாம் என்பதுதான் சிங்கள அரசியல்வாதிகளின் திட்டம்.


1937 ஆம் ஆண்டு பாவற்குளம் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பாவற்குளம் பதவியாவாக மாற்றப்பட்டது. பதவியாவுக்கு அடுத்ததாக ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத்திட்டம் கல்லோயாத் திட்டம். அடுத்தது அல்லை- கந்தளாய் குடியேற்றம். இந்தக் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது கந்தளாயில் சிங்களவர்களுக்கு மட்டும் காணி வழங்கப்படுவதை சுந்தரலிங்கம் கண்டித்தார். சுந்தரலிங்கத்துக்கு பதிலளித்த டீ.எஸ். இனவிகிதாசார அடிப்படையில் காணிகள் வழங்கப்படும் என வாக்குறுதி அளித்தார்.

வாக்குறுதி அளித்தபடி படி தமிழர்களுக்கும் காணிகள் வழங்கப்பட்டன. ஆனால் காலத்துக்குக்காலம் தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசாங்கங்களால் ஏவி விடப்பட்ட வன்முறைகளைத் தொடர்ந்து தமிழர்கள் தமது காணிகளை அடிமாட்டு விலைக்கு சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் விற்று விட்டு யாழ்ப்பாணத்தில் குடியேறிவிட்டனர். குளக்கோட்டன் கட்டிய குளம் இன்று சிங்கவர்களின் கைகளில். கந்தளாய் இன்று கந்தலே ஆகிவிட்டது. ஆதி கோணேசர் ஆலயம் அமைந்துள்ள தம்பலகமம் 'தம்பக முவ 'ஆகிவிட்டது. கந்தளாய் இன்று சிங்களப்பிரதேசம்.

அம்பாறை, திருகோணமலை, வவுனியா என எல்லா இடங்களிலும் நேரடியாகவும்,மறைமுகமாகவும் தமிழர்களின் நிலங்கள் மகாவலி குடியேற்றம் என்ற பெயரில் அபகரிக்கப்படுவது இன்று வரை தொடர்ச்சியாக இடம் பெற்று வருகிறது. மணலாறு வெலி ஓயாவாக மாறியதும் இப்படித்தான். தமிழர்களை அவர்களது பூர்வீக நிலங்களிலிருந்து விரட்டியடித்து விட்டு தமிழர்களின் நிலங்களில் சிங்களவர்களை குடியமர்த்தும் செயற்பாடுகளை இலங்கையை ஆட்சி செய்து வரும் இரண்டு அரசாங்கங்களும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதைத்தான் இலங்கையின் கடந்தகால நிகழ்கால வரலாறு எடுத்துக்காட்டுகிறது.

இந்த வகையில் சிங்கள -பௌத்த பேரினவாதிகளின் அடுத்த தெரிவு குருந்தூர்மலையா என்ற சந்தேகம் தமிழர்கள் மத்தியில் எழுந்துள்ளது. குருந்தூர் மலையைச்சுற்றி செழிப்பான வயல் நிலங்கள் காணப்படுகின்றன. கோடை காலத்திலும் நீர்ப்பாசன வசதியைக்கொண்ட தண்ணிமுறிப்புக்குளமும், அருகில் ஆறுமுகத்தான் குளமும் உள்ளன.

கால்நடைகள் சுதந்திரமாக மனம் போன படி உலாவும் நீராடும் பிரதேசமாக உள்ள குருந்தூர் மலையில் பேரினவாதிகள் கண் வைத்ததில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. குருந்தூர் மலை 'குருந்துவா' என்பதாகவே அடையாளப்படுத்தப்பட்டு அதே பெயரையே நாமும் உச்சரிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை.



(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# தமிழ்....

எனவே மேற்கு நாடுகளின் விருப்பத் தெரிவு ரணில்தான். ராஜபக்சக்கள் தாம் வலிந்து தாக்கும் நிலைக்கு வளர்ந்து விட்டதாக நம்பினாலும்கூட, தங்களுக்குப் பொருத்தமான முன் தடுப்பு ரணில் விக்கிரமசிங்கதான் என்பதில் தெளிவாக இருக்கிறார்கள். எனவே, அவர்கள் ரணிலுடன் தமது பேரத்தை அதிகப்படுத்த விரும்பினாலும், ரணிலை விட்டால் அவர்களுக்கு வேறு தெரிவில்லை. அப்படித்தான் மகா சங்கத்துக்கும், படைத்தரப்புக்கும். அதாவது உள்நாட்டிலும் அனைத்துலக அளவிலும் மேற்கு நாடுகள் மத்தியிலும் ரணில் விக்கிரமசிங்கவுக்குத்தான் அதிகம் வரவேற்புக் காணப்படுகின்றது. அதனால்தான் ராஜபக்சக்கள் அவருடைய வழிகளைத் தடுக்காமல் இருக்க மைத்திரி அவ்வாறு பேச வைக்கப்படுகின்றாரா?

ஆயின், இந்த விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன? ரணில் விக்கிரமசிங்க எல்லாப் பேரரசுகளையும் சமதூரத்தில் வைத்துக் கையாளக்கூடிய ஒருவர். அப்படிப்பட்ட ஒருவர் இந்தியாவைப் பொறுத்தவரையிலும் கையாளக் கடினமானவர். அப்படிப் பார்த்தால் இந்தியா ரணிலை ஒரு விருப்பத் தெரிவாக எடுக்கமுடியாது.

அது ரணிலுக்கும் விளங்கும். அதனால்தான் அவர் ஜனாதிபதித் தேர்தலில் இந்தியா தனக்கு எதிராகப் போகாமல் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு இந்தியாவுடன் குறிப்பிடத்தக்க அளவுக்கு இணங்கிப் போக முயற்சிக்கின்றார். யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளிலும் இந்திய நிறுவனங்களுக்கு மீளப் புதுப்பிக்கும் எரிசக்தி திட்டங்களை வழங்கும் உடன்படிக்கைகள் கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி கையெழுத்திடப்பட்டன. அதுபோலவே ராமர் பாலம் என்ற விடயத்திலும் ரணில் உண்மையாக இருக்கிறார் என்ற ஒரு தோற்றம் வெளிக்காட்டப்படுகிறது. ராமர் பாலத்தை கட்டப் போவதாக ரணில் இந்தியாவை நம்ப வைக்கின்றார். தன்னை நம்பத் தயாரற்ற ஒரு பக்கத்து பேரரசுக்கு நாட்டை முழுமையாகத் திறக்கத் தயார் என்று காட்ட ரணில் முற்படுகிறாரா?

இந்தியப் பொருளாதாரம் அண்மைய ஆண்டுகளில் வளர்ச்சி கண்டு வருகிறது. தமிழகத்திலும் அதுதான் நிலைமை. இவ்வாறு ஒரு பெரிய பொருளாதாரத்தோடு சிறிய இலங்கைத் தீவை நிலத்தால் இணைத்தால், இலங்கைத் தீவு விழுங்கப்பட்டு விடும் என்ற ஒரு பயத்தை சிங்கள மக்கள் மத்தியில் இலகுவாகத் தூண்டமுடியும். இந்த விடயத்தை ரணில் எப்படிக் கையாள்வாரோ தெரியவில்லை. ஆனால் அவர் ஒரு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி. பாலங்கட்டத் தயார் என்று சொன்னதிலிருந்து அவர் பின்வாங்கமுடியுமா இல்லையா என்பது இந்தியா அந்த விடயத்தை எப்படிக் கையாளப்போகிறது என்பதில்தான் தங்கியிருக்கின்றது.

புதுடில்லி ஜே.வி.பி.யை அழைத்து கதைத்தமையும் ரணில் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் நோக்கிலான ஒரு நடவடிக்கைதான். ரணிலுக்கு எதிராகக் கையாளப்படத்தக்க சக்திகளை இந்தியா அரவணைக்கிறது என்று பொருள்.

எதுவாயினும், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரையிலும் இந்தியா தனக்கு நெருக்கடிகளைத் தரக்கூடாது என்று ரணில் கருதுவதால், அவர் இந்தியாவை எப்படியும் சுதாகரிக்கத்தான் முயற்சிப்பார்.

இவ்வாறாக தென்னிலங்கையில் ஜனாதிபதித் தேர்தலை நோக்கி கட்சிகள் வியூகங்களை அமைத்து உழைத்து வருகின்றன. தமிழ்த் தரப்பிலோ பிரதான கட்சி நீதிமன்றத்தில் இருந்து வீட்டுக்கு வரமுடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது. ஒரு கட்சி புறக்கணிப்பு என்று சொல்லிவிட்டு ஒதுங்கி விட்டது. தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் கட்சிகள் கருத்துருவாக்கம் என்ற கட்டத்தைக் கடந்து அதற்கான கட்டமைப்பு சார்ந்த நடவடிக்கைகளில் இன்னமும் இறங்கவில்லை. தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டது போல, தமிழ் ஐக்கியந்தான். கடந்த 15 ஆண்டுகளாக் முடியாமல் போன காரியம் அது. கடந்த மாதம் தமிழக முதல்வருக்கு அனுப்பப்பட்ட கூட்டுக் கடிதத்தைப் போல, அரிதாக ஏதாவது நடக்கும். மற்றும் படி கடந்த 15 ஆண்டுகளாக தமிழ்மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதில் எல்லாக் கட்சிகளுமே தோல்வியடைந்து விட்டன. இந்த லட்சணத்தில் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை நோக்கி இதே கட்சிகளை எப்படி ஒருங்கிணைப்பது? அல்லது கட்சிகளைக் கடந்து மக்கள் அமைப்புகள் அதை முன்னெடுக்கவேண்டுமா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org